குழந்தைகள் பத்திரிகை
27-4-1975
50 காசு

# கோகுலம்



RAAS/B/156 TAM





12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக் கணக்கை தாமே நடத்தலாம்.

# கோகுலம்

மலர் 4 □ இதழ் 2
ஏப்ரல் 27, 1976
ராட்சஸ, சித்திரை 14


சந்தா விவரம்:
உள்நாடு:
ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50
வெளிநாடுகள்:
ஆண்டுச் சந்தா ரூ 27-50

உயிர்களிடத்து அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்
- பாரதியார்




இந்த வாளுக்கு அதனுடைய நாட்டில் இப்போது தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு அதிகம் உயிர்களை இது பலி வாங்குகிறதோ அவ்வளவுக்கு அதன் பெருமை அதிகமாகும். வாளின் பெயர் என்ன? எந்த நாட்டினுடையது?







உணவைக் கழுவிய பிறகே சாப்பிடக்கூடிய இது அமெரிக்க வாசி. இதன் பெயர் என்ன ?


விடை 23-ம் பக்கம் பார்க்க

இந்தப் பறவையில் ஒருவகை, எகிப்தியர்களால் வணங்கப்பட்டது. கொக்கின் இனத்தைச் சேர்ந்த இதன் பெயர் என்ன ?




இங்குள்ள நகரங்களின் பெயர்களைக் கூற முடியுமா ?

# அறநெறி

திருமுருக கிருபானந்த வாரியார்

## 2. கோபம் கூடாது

கோபம் பாபத்தைச் செய்விக்கும். கோபம் வந்த போது என்ன பேசுகின்றோம்; என்ன செய்கின்றோம் என்று தெரியாத ஒரு மயக்கத்தை உண்டாக்கும்.

**தன்னைத்தான் காக்கில்**
**சினங்காக்க ; காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்**

என்கிறார் திருவள்ளுவர்.

கோபம் குடியைக் கெடுக்கும். கோபத்தால் கெட்டவர் பலர்.

ஓர் ஊரில் சமந்தகன் என்ற ஓர் ஏழை இருந்தான். வறுமையால் வாடினான். அவன் கானகம் சென்று, போனகத்தைத் துறந்து கடவுளை வேண்டிக் கடும் தவம் செய்தான்.

கடவுள் அவன் முன்னே தோன்றிக் காட்சி அளித்தார்.

"அன்பனே ! உனக்கு என்ன வரம் வேண்டும் ?" என்றார்.

"கருணைக் கடலே! நான் பரம ஏழை. எனக்குச் செல்வம் வேண்டும்" என்றான் சமந்தகன்.

கடவுள் அவனிடம் சிறு தடியைத் தந்தார். சமந்தகன், "தெய்வமே ! நான் பொருளைக் கேட்டால் நீர் தடியைத் தந்தீரே !" என்றான்.

"அன்பனே! பணம் தந்தால் நீ சுமந்து கொண்டு செல்ல வேண்டும். இந்தத் தடியைத் தட்டினால் ஆயிரம் பொற்காசு உதிரும். உனக்குத் தேவைப் பட்டபோதெல்லாம் தட்டிக் கொள்" என்றார் ஆண்டவன்.

"ஆ! ஆண்டவனே ! அப்படியா ? பெரு மகிழ்ச்சி. ஒரு முறை தட்டிப் பார்த்துக் கொள்ளட்டுமா ?"

"அன்பனே! என் சொல்லில் உனக்கு நம்பிக்கை இல்லையா? உனக்கு விருப்பம் இருந்தால் தட்டிப் பார்த்துக் கொள்."

சமந்தகன் அத்தடியைத் தட்டினான். ஆயிரம் பொற் காசுகள் உதிர்ந்தன. அவனுக்குப் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று.

"கடவுளே ! இப்படி எத்தனை முறை தட்டினால் பொற்காசுகள் வரும்?"


"அன்பனே! லட்சம் முறை தட்டினாலும் பொன் வந்து கொண்டேயிருக்கும்."

"ஓ, அப்படியா ? தடி கெட்டுப் போகாதா ?"

"அப்பா! இது யந்திரமா? கெடாது; தப்பாது பயன் தரும்."

"சுவாமி! மெத்த மகிழ்ச்சி. தட்டித் தட்டிப் பணத்தைச் சேமித்து வைத்துக் கொள்ளுவேன்!"

"அன்பனே! அது நல்லதல்ல. பணம் நிரம்ப இருந்தால் கள்ளன் வருவான். வேண்டும்போது தட்டிக் கொள்."



"ஐயனே ! இன்னும் ஒரு முறை தட்டிப் பார்க்கிறேன்" என்று மறு முறை தடியைத் தட்டினான். மற்றும் ஓராயிரம் பொற்காசுகள் உதிர்ந்தன. அவற்றை எடுத்து மூட்டை கட்டிக் கொண்டான்.


"கடவுளே ! இத்தடி ஒரு போதும் தவறாது பணம் தருமா ?"

"அன்பனே! தவறாது பணம் தரும். ஆனால் உனக்குக் கோபம் வந்தால் தடி பலிக்காது. உனக்குக் கோபம் வருமா?"

"ஆம், சுவாமி! எனக்கு அடிக்கடி கோபம் வரும். ஆனால் இனி கோபம் வராமல் பார்த்துக் கொள்ளுவேன்."

கடவுள் மறைந்துவிட்டார். சமந்தகன் ஈராயிரம் தங்கக் காசுகளை மூட்டை கட்டித் தலையில் வைத்துக் கொண்டு, தடியைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு தன் ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

"மனமே! கோபம் வரக்கூடாது. கோபம் வந்தால் தடி பலிக்காது" என்று உருப் போட்டுக் கொண்டே போனான்.



ஊருக்கு அருகில் ஒரு சந்நியாசி எதிர்ப்பட்டார். அச்சந்நியாசி சமந்தகனைப் பார்த்து, "ஐயா! எங்கே போய் வருகின்றாய்?" என்று கேட்டார்.

சமந்தகன், "சுவாமிஜி ! நான் கடவுளை வேண்டிப் பெருந் தவம் செய்து பொற்காசுகள் தருகின்ற தடியைப் பெற்று வருகின்றேன்" என்றான்.

சந்நியாசி, "ஐயா! பெரிய ஆச்சரியமாக இருக்கின்றதே! தடி பணம் தருமா? எங்கே, காட்டு, பார்ப்போம் !" என்று வினவினார்.

சமந்தகன், "சுவாமி! இதோ பாருங்கள். தட்டுகின்றேன். காசு உதிரும். நீர் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரு காசு கூடத் தரமாட்டேன்" என்று கூறித் தடியைத் தட்டினான். உடனே ஓராயிரம் பொற்காசுகள் உதிர்ந்தன. அவற்றை எடுத்துமூட்டை கட்டிக் கொண்டான்.

சந்நியாசி, "ஐயா ! இத்தடி எப்போதும் பொற்காசுகளைத் தருமா ?" என்று கேட்டார்.

"ஆம்! எப்போதும் தப்பாது தரும். எனக்குக் கோபம் வந்தால் தடி பலிக்காது."

"ஓ ! உனக்குக் கோபம் வருமா ?"

"ஆம், அடிக்கடி வரும். ஆனால் இனி வராது."

"அப்படியா ? இனி உனக்குக் கோபம் வராதா ?"

"இனி வராது."

"எப்போதும் வராதே ?"

"வராது."

"ஒருபோதும் வராதே ?"

"ஒரு போதும் வராது."

"என்றுமே வராதே !"

"என்றும் வராது."

"நிச்சயமாக வராதே."

"நிச்சயமாக வராது."

"உறுதியாக வராதா ?"

"உறுதியாக வராது."

"கோபம் ஒரு நாளும் வராதா ?"

"ஓய், கோபமே வராது என்று கூறினேன். சும்மாச் சும்மா வராதா வராதா என்று கேட்கின்றாய். உனக்குப் புத்தியில்லையா ? மூடனே !" என்று சத்தம் போட்டுக் கோபத்துடன் அவரைத் திட்டினான். சந்நியாசியாக வந்த கடவுள் மறைந்து விட்டார். தடியும் தன் மகிமையை இழந்தது. சமந்தகன் தன் அறியாமைக்கு வருந்தி மூவாயிரம் பொன்னுடன் வீடு சேர்ந்தான்.

# ஏணி

பள்ளிக்கூட மணி அடித்தது

மாணவர்கள் தேங்காய் உடைத்த மாதிரி நாலா பக்கமும் சிதறி ஓடினர்.

ஆனால், அந்த வகுப்பில் மட்டும் ஒரு மாணவன் விசித்து விசித்து அழுது கொண்டிருந்தான்.

பள்ளி முடிந்து வகுப்பை விட்டு வெளியே செல்லவிருந்த ஆசிரியர் அழு குரல் கேட்டு அப்படியே நின்றார்.

''கருணாகரா! வா, இப்படி!'' ஆசிரியர் அன்புடன் அழைத்தார்.

கருணாகரன் கண்களைத் துடைத்துக் கொண்டே மெல்ல அவரிடம் சென்றான்.

''எல்லா மாணவர்களும் சென்று விட்டார்கள். நீ மட்டும் உட்கார்ந்திருக்கிறாயே, வீட்டுக்குப் போகவில்லை?''

அவனிடம் பதில் வராததைக் கண்ட அவன் வகுப்பு ஆசிரியர், ஏதோ நடந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு ''என்ன நடந்தது? சொல் கருணாகரா?'' என்று கருணையுடன் கேட்டார்.

''இனிமே நீ படிக்க வேண்டாம், ஏதாவது ஒரு வேலையைப் பாருன்னு எங்கப்பா சொல்லிட்டாரு சார்!'' மீண்டும் அவன் தொண்டை துக்கத்தால் அடைத்தது.

''என்ன? உன்னையா படிக்க வேண்டாம்னு சொல்லிட்டாரு... சரி சரி... நீ கவலைப்படாதே... எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன். நீ அழாமே வீட்டுக்குப் போ... என்ன?''

ஆசிரியரின் ஆறுதல் அவன் கண்ணீரை நிறுத்தியது.

கருணாகரன் ஓர் ஏழை மாணவன். அவன் தந்தை ஒரு நெசவாளி. நூல்களைப் பின்னிப் பின்னி அழகான துணிகளை நெய்யத் தெரிந்த அவருக்கு, வருவாய் என்னும் நூலைப் பின்னிக் குடும்பமென்னும் துணியை நெய்ய உடலிலே போதிய சக்தியில்லை. அதனால்தானோ என்னவோ அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். கருணாகரனுக்கு இரண்டு தங்கைகள் உண்டு. ஒரே ஆண்பிள்ளையான கருணாகரன் செல்லப் பிள்ளையாகஇருக்கக் கொடுத்து வைக்கவில்லை: அதற்கு வறுமை குறுக்கே வந்து நின்றது.

கருணாகரன் ஏழையே தவிர, வகுப்பில் அவனே முதல் மாணவன். அதனால் தானோ என்னவோ கருணாகரன் மீது அவன் வகுப்பு ஆசிரியர் தயானந்தம் மிக்க அன்பு வைத்திருந்தார்.

ஒரு சமயம் சரித்திரப் புத்தகமும், நோட்டுப் புத்தகமும் வாங்கவில்லை என்பதற்காகச் சரித்திர ஆசிரியர், அவனை வகுப்பிலிருந்து வெளியேற்றி விட்டார்.

சரித்திர ஆசிரியர் கண்டிப்புக்காரர் என்று தயானந்தத்துக்குத் தெரியும். மறுநாள் கருணாகரன் புத்தம் புதிய சரித்திரப் புத்தகத்தையும், நோட்டுப் புத்தகங்களையும் வாங்கி வந்ததைக் கண்ட மற்ற மாணவர்கள் ஆச்சரியமடைந்தனர், இவனுக்கு எப்படித் திடீரென்று இந்தப் புத்தகங்கள் வந்தன என்று. ஆனால் அந்தப் புத்தகங்கள் ஆசிரியர் தயானந்தம் வாங்கித் தந்தவை என்று அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

அன்று பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நடக்கும் நாள்.


கருணாகரன் அதற்கு முந்திய வகுப்புக்களில் படிக்கும்போது நடந்த கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவன். அதுவும் முதல் பரிசைத் தட்டிச் சென்றவன்.

ஒவ்வொரு ஆண்டும் இவனோடு போட்டியிட்டுத் தோற்றவர்கள் மீண்டும் மீண்டும் போட்டி யிட்டார்கள் முயற்சியில்லாமல்.

ஆசிரியர் தயானந்தத்துக்குத் தெரியும், கருணாகரனே இவ்வாண்டும் வெற்றி பெறுவான் என்று. அவன் மீது அவ்வளவு நம்பிக்கை அவருக்கு!

ஆசிரியர் நினைத்தது சரியாகவே இருந்தது. கருணாகரனுக்கே கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு!

அன்று மாலை பள்ளியிலிருந்து கருணாகரன் வீட்டுக்கு வந்தான்.



நோய்வாய்ப் பட்டிருந்த அவனது தந்தை தம் மகனை அருகே அழைத்தார். அவன் தாய் சோகமாக அருகே அமர்ந்திருந்தாள். கயிற்றுக் கட்டிலில் உருக்குலைந்து காணப்பட்ட அவர், ''கருணா! நீ இந்த வருஷத்தோட படிப்பை நிறுத்திக் கொள்வது நல்லதுன்னு நினைக்கிறேன். ஏன்னா, நான் பிழைக்க மாட்டேன்...'' என்றார் இருமிக்கொண்டே.

''அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள்'' என்ற குரலைக்கேட்டு அனைவரும் வாசல் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

ஆசிரியர் தயானந்தம் நின்றுகொண்டிருந்தார்.

அவர் கையில் ஒரு பை இருந்தது. அதில் பழங்கள் இருந்தன. பழங்களைக் கருணாகரனின் தந்தையிடம் கொடுத்து விட்டு, ''ஐயா! கருணாகரனை மேலும் படிக்க வேண்டாம் என்று சொன்னீர்களாமே?'' என்றார்.

''ஆமாங்க. அவனை மேலே படிக்க வைப்பதற்கு எங்களுக்குச் சக்தியில்லே. அதுமட்டுமில்லாம இந்தக் குடும்பத்தைக் காப்பாத்தறத்துக்கு இவனை விட்டா வேறுயாருமில்லே..''

''அதுக்காக இவன் படிப்பையே பாழாக்கிடணும்னு நினைக்கிறீங்களா?''

''அதுமாதிரியான எண்ணம் எனக்குக் கொஞ்சம்கூட இல்லே. ஆனா, குடும்பம்.... குடும்பம்....''

''ஆமா, பெரிய குடும்பம்...இவனுக்குப் படிக்கிற ஆர்வம் நிறைய இருக்குங்க. அதற்கு அணை போட்டுத் தடுத்திடாதீங்க... கருணாகரன் படிப்பதற்கு நான் உதவி செய்யறேன். நீங்க எதுக்கும் கவலைப்பட வேண்டாம்.''


''என்ன?''

கருணாகரனின் தந்தை கட்டிலை விட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார். கருணாகரனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. அவன் தாய் அதிசயமாக ஆசிரியரைப் பார்த்தார்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? பள்ளி இறுதி வகுப்புக்குப் பிறகு கல்லூரியில் அவனைப் படிக்க வைக்க நான் உதவி செய்யறேன்...''

''உங்களுக்கு எதற்குச் சிரமம் எல்லாம்?''— கருணாகரன் தந்தை கேட்டார்.

''எனக்கு எந்தச் சிரமமும் இல்லே. இந்த உதவியை நான் மட்டும் தனித்தா செய்யப் போகிறேன்? எனக்குப் பெரிய மனிதர்கள் சிலரைத் தெரியும். அவர்கள் இம்மாதிரியான ஆர்வமுடன்படிக்கின்ற பிள்ளைகளுக்குப் பொரு



பி.விக்கிரி

ளுதவி செய்யக் காத்துக் கொண்டிருக் கிறார்கள்...''

''அப்படியா?''

''ஆமாம். அதனால்தான் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறேன். அதுவரை உங்கள் உடல் நலனை ஒரு மருத்துவமனையில் சேர்ந்து நன்றாகக் கவனித்துக் கொள் ளுங்கள். அதற்கும் எனக்குத் தெரிந்த மருத்துவரிடம் சொல்லி ஏற்பாடு செய் கிறேன்...'' என்று ஆசிரியர் தயானந் தம் சொன்னது, அவர்களுக்குத் தெய் வமே நேரில் வந்து சொல்வது போல் இருந்தது.

கருணாகரன் கல்லூரிப் படிப்பைத் தொடங்கி விட்டான்.

அவன் படிப்புக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து வந்தார் தயானந்தம். கருணாகரன் மீது இப் படிக் கருணை மழை பொழிவதற்குக் காரணம், அவருக்குப் பிள்ளையே இல் லாத குறையாக இருக்கலாமோ?

**ம**ருத்துவமனை சென்ற கருணாகர னின் தந்தை உடல் தேறி வந்து இப் போது வீட்டிலேயே தம் மனைவி உதவியுடன் நெசவு வேலையில் மெல்ல மெல்ல ஈடுபட்டார்.

தம் மகன் கல்லூரியில் படிப்பது கண்டு பெற்றோர்கள் பெருமிதம் அடைந்தனர். கருணாகரன் பி.ஏ., படித்து முடித்து விட்டான்!

பள்ளியில் எப்படி முதல் மாணவனாகத் திகழ்ந்தானோ அதுபோலவே பி.ஏ. தேர்விலும் முதலாவது வகுப்பில் தேறினான். ஆசிரியர் அடைந்த மகிழ்ச் சிக்கு அளவே இல்லை.

**கா**லம் ஓடியது!

ஆசிரியர் தயானந்தம் ஓய்வுகூடப் பெற்று விட்டார்!

ஒரு சமயம் கடுமையான காய்ச்ச லினால் மிகவும் அவதிப்பட்டார். கால மெல்லாம் உழைத்து உழைத்து ஓடாய்ப் போன அவருக்கு ஆறுதல் கூற அவர் மனைவியைத் தவிர வேறு யாரும் இல்லை.

''இப்படி உழைச்சு உழைச்சு உருக் குலைந்து போயிட்டீங்களே. உங்களுக்கு உதவ யாருமே இல்லையா?'' என்று அவர் மனைவி சோகத்துடன் கேட்டாள்.

''உழைக்கிறதுக்குத்தான் ஆண்ட வன் கையையும் காலையும் படைச் சிருக்காரு. உழைக்கிறது ஒருத்தருக்கு உதவி செய்யறது எல்லாம் மனிதனு டைய கடமை அல்லவா? பிரதிபலன் எதிர்பார்த்து உதவி செய்தா, உதவிங் கிற வார்த்தைக்கே அர்த்தமில்லாமல் போகுமே...'' என்றார் பொறுமையாக.

''ஆமா, நீங்க இப்படித்தான் சொல் வீங்க. எத்தனையோ பேரு உங்களாலே முன்னேறினாங்க... ஆனா நீங்க...? இப்ப மருந்துக்குக்கூடப் பணம் இல்லாம கஷ்டப்படறீங்க...ம். இதுதான் உல கம்....'' என்றாள் பெருமூச்சுடன்.

அப்போது, வாசலில் தபால்காரர் ஆசிரியர் பெயரைச் சொல்லிக் கூப்பிட் டார். அவசரம் அவசரமாக ஓடினாள் ஆசிரியரின் மனைவி.

''மணியார்டர் வந்திருக்கு... நம்ம சார் இருக்காரா?'' என்று தபால்காரர் கேட்டார்.

''இருக்கிறார். அவருக்கு உடம்பு சரியில்லே. ஆமா, யாரு பணம் அனுப்பி இருக்காங்க?''

''திருச்சியிலிருந்து கருணாகரன் என் கிறவர் நூறு ரூபாய் அனுப்பியிருக் கிறாரம்மா!''

''கருணாகரனா? கொஞ்சம் இருங்க, இதோ வந்துடறேன்..'' என்று சொல்லி விட்டு உள்ளே வந்தாள்.

தெருப்பக்கமாக இருந்த அறையில் ஆசிரியர் படுத்திருந்ததால் தபால் காரர் பேசியதெல்லாம் அவருக்கு நன்கு கேட்டது.

''கருணாகரன் ... கருணாகரன் ...'' அவர் வாய் முணு முணுத்தது. பணத் தோடு ஒரு கடிதமும் வந்திருந்தது. அதைப் பிரித்துப் படித்தார்.

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். உங்கள் உடல்நிலை சரி யில்லை என்று என் நண்பன் மூலம் கேள்விப்பட்டேன்.

இன்று நூறு ரூபாய் அனுப்பியுள் ளேன். இன்னும் அனுப்புவேன். மருத்துவச் செலவுகளுக்காக இதனைப் பெற்றுக் கொள்ளப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

எனக்குப் பெற்றோர்கள் இருந்தும் உங்களால் பேணிக் காக்கப்பட்டவன் நான்.

நீங்கள் ஏணியாக இருந்து என்னை உயர்த்தினீர்கள். உங்களால் நான் வளர்ந்தேன் — மனிதனானேன் — உயர்ந் தேன்.

இன்று திருச்சியில் ஒரு நல்ல வேலை யில் இருப்பதற்கும் நீங்கள் அன்றோ காரணம்?

, பள்ளிப் பருவத்தில் நீங்கள் என் னிடம் காட்டிய பரிவு என் நெஞ்சில் என்றும் பசுமையாய் இருக்கும்.


நன்றியுள்ள,

கருணாகரன்

ஆசிரியரின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் கடிதத்தை நனைத்தது!

# மழையே நீ வாராயோ?

குடந்தை சீனிவாசன்



மழையே மழையே வாராயோ
மக்கள் கவலை தீர்த்திடவே !
குழந்தைகள் நாங்கள் அழைக்கின்றோம்
கொடுமை களைய வந்திடுவாய் !

பஞ்சம் என்றால் என்னவென்று
பார்த்தே அறியாப் பிஞ்சுகளும்
அஞ்சி நிற்கும் நிலைமாற
கொஞ்சம் இரங்கி வாராயோ ?

எங்கள் ஊரில் இருக்கின்ற
ஏரிகள் கிணறு எதிலுந்தான்
தங்கி நின்ற நீர்வற்றி
தரையாய்க் காட்சி தந்திடுதே !

ஒருநாள் விட்டு மறுநாளே
உயிரைக் கொடுத்து அடித்தாலும்
ஒருசில சொட்டு வருவதற்குள்
ஓடி மறையுதே உள்ளுக்குள் !

எங்கள் தாகம் தவிர்த்திடவே
இயற்கைத் தெய்வம் நீவருவாய்
பொங்கும் புனலாய் எங்கணுமே
பூமியில் இனிக்கச் சுரந்திடுவாய் !

பிழைகள் பலவும் செய்திடினும்
பிள்ளைகள் நாங்கள் வேண்டுகின்றோம்;
பொறுத்தே அருள்வாய் கருணையுடன்
பொழிவாய் மழையாய்ப் புவியெங்கும்




# மழையே வா!

வித்துவான்
சு. உமைதாணு

மழையே மழையே வாவாவா !
மாரி மழையே வாவாவா!
உழவர் உன்னைக் காணாமல்
உள்ளம் வருந்தி நிற்கின்றார்.

வாடும் பயிர்கள் வளர்ந்திடவா
வாய்க்கால் குளங்கள் நிறைந்திடவா
ஓடி நதிகள் ஒழுகிடவா
ஊரும் நாடும் செழித்திடவா !

உலகிற் காணி ! நீயாவாய்
உண்ணும் உணவும் நீயாவாய்
உலகில் உள்ள உயிரெல்லாம்
உன்னை யன்றி வாழ்ந்திடுமோ ?



# பாகிஸ்தான் கொடுத்த ஹாக்கிக் கோப்பை!

குண்டு மணி



உலக அரங்கில் இந்திய மக்களைத் தலை நிமிர்ந்து நிற்கவைத்தது ஹாக்கிப் பந்தயம்தான். இந்திய ஹாக்கி வீரர்கள் சமீபத்தில் மலேசியாவிலுள்ள கோலாலம்பூரில் மூன்றாவது உலகக் கோப்பைப் பந்தயத்தில் மகத்தான வெற்றி பெற்றது உங்களுக்குத் தெரிந்ததே.

ஹாக்கி விளையாட்டு ஆசியாவிலிருந்து, பாரசிகத்திலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரம் உள்ளது. பாரசீகர்கள் போலோ விளையாட்டு ஆடினர். போலோ விளையாட்டு குதிரையின் மீது அமர்ந்து கொண்டு குச்சியால் பந்து அடித்து விளையாடுவது. இதுவே ஹாக்கி விளையாட்டின் தோற்றத்துக்கு அடிகோலியது. குதிரைகளில் அமர்ந்து போலோ ஆட்டம் ஆட முடியாதவர்கள் கையில் குச்சி ஏந்தி ஹாக்கி ஆட்டம் ஆடத் தொடங்கினர்.

ஹாக்கி ஆட்டம் கிறிஸ்து பிறப்பதற்கு முன் ஐந்தாவது நூற்றாண்டிலேயே கிரேக்கர்கள் ஆடியிருப்பதாக சாஸனம் உள்ளது. இந்த சாஸனம் கி. மு. 478ல் தெமிஸ் டோகில்ஸ் கட்டிய சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் பந்தய ஆட்டங்கள் ஆடிய கிரேக்கர்கள் ஒரு குச்சியையும் பந்தையும் வைத்து விளையாட்டுப் போட்டி நடத்தி யிருக்கிறார்கள். ரோமர்கள் பிரிட்டனைப் படையெடுத்தபோது ரோமானிய ராணுவ வீரர்கள் ஹாக்கி போன்ற ஆட்டத்தை ஆடியிருக்கிறார்கள்.

ஹாக்கி ஆட்டத்தைப் பற்றி ஒரு ரசமான கதை. அயர்லாந்திலுள்ள அரசன் ஒருவன் இளமையில் ஊமையாக இருந்தான். அவன் ஹாக்கி ஆடும்போது பந்து அரசனைப் பலமாகத் தாக்கி விட்டது! அந்தப் பலத்த தாக்குதலினால், வலி பொறுக்க முடியாமல் அரசன் அலறித்துடித்தான். அதன் பிறகு அயர்லாந்து மன்னன் பேசத் தொடங்கி விட்டானாம்!

அந்தக் காலத்தில் ஹாக்கி விளையாட்டில் காலாலும், உடலாலும் பந்தைத் தடுத்து நிறுத்தலாம். விளையாட்டு மைதானத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் 'கோல்' போடலாம்!

நாளாக நாளாக ஹாக்கி ஆட்டத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. 1840ம் வருஷத்தில் முதல் ஹாக்கி கிளப் — பிளாக் ஹீத் கிளப் — உருவாயிற்று. 1886ம் வருஷம் லண்டனில் நிர்மாணிக்கப்பட்ட ஹாக்கி சங்கத்துக்குக் கிளாரென்ஸ் கோமகன் முதல் தலைவரானார். முதன் முதலில் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையே ஹாக்கிப் பந்தயம் நடைபெற்றது.

ஹாக்கி விளையாட்டை ஆங்கிலேயர்கள் பிராபல்யப்படுத்தினாலும் இந்தியர்களே 1928ம் வருஷத்திலிருந்து இதில் மன்னர்களாக வெற்றி மகுடம் தரித்துத் திகழ்ந்தார்கள்.

1928ல் ஆர்ம்ஸ்டர்டாம் ஒலிம்பிக், 1932ல் லாஸ் ஏஞ்செல்ஸ் ஒலிம்பிக், 1936ல் பெர்லின் ஒலிம்பிக், 1948ல் லண்டன் ஒலிம்பிக், 1952ல் ஹெல்சிங்கி ஒலிம்பிக், 1956ல் மெல்போர்ன் ஒலிம்பிக் பந்தயங்கள் இந்தியாவுக்கு உலக சாம்பியன் பட்டத்தைத் தந்தன.

1960ம் வருஷம் ரோம் ஒலிம்பிக்கில் இந்தியாவிடமிருந்து உலக சாம்பியன் பதவியைப் பாகிஸ்தான் பறித்துக் கொண்டது. 1964ம் வருஷம் டோக்கியோ ஒலிம்பிக்கில் உலக சாம்பியன் பதவியைப் பெரும் பாடுபட்டு இந்தியா திரும்பப் பெற்றது இமாலய சாதனை. 1968ம் வருஷம் மெக்ஸிகோ ஒலிம்பிக்கில் மீண்டும் பாகிஸ்தானே உலக சாம்பியன் ஆனது. ஸெமி பைனலிலேயே ஆஸ்திரேலியாவிடம் இந்தியா தோற்றுப்போனது! 1972ம் வருஷம் மியூனிக்

ஒலிம்பிக்கிலும் இந்தியாவுக்கு ஹாக்கிப் போட்டியில் மூன்ருவது பரிசு வெண்கலம் தான் கிட்டியது. அப்போது மேற்கு ஜெர்மனி புதிதாக உலக சாம்பியன் பதவியை பெற்றது வியப்பிலும் வியப்பு!

இது வரையில் மூன்று உலகக் கோப்பைப் பந்தயங்கள் நடைபெற்றுள்ளன. பார்ஸிலோனுவில் முதல் உலகக் கோப்பைப் பந்தயம் நடைபெற்றது. இதில் இந்தியா மூன்ருவது இடத்தைப் பெற்றது. இரண்டாவதாக ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற உலக ஹாக்கிப் போட்டியில் இந்தியாவுக்கு இரண்டாவது இடம் கிட்டியது. மூன்ருவது மலேசியாவில் உள்ள க்வாலாலம்பூரில் இந்தியா உலகக் கோப்பை பெற்றது. நல்ல முன்னேற்றம் தான். ஏழு லட்சம் ரூபாய் மதிப்புள்ள இந்த ஹாக்கி உலகக் கோப்பையை நன்கொடையாக வழங்கியவர்கள் பாகிஸ்தானியர் என்ருல் உங்களுக்கு வியப்பாயிருக்கிறதில்லையா? இந்திய ஹாக்கி வீரர்களின் திறமை அடியோடு மறைந்து விடவில்லை என்பதையே எடுத்துக் காட்டியது!




தயான் சந்த்

ஜான்ஸி ராணி அவதரித்த புண்ணிய பூமியில் பிறந்த மேஜர் தயான்சந்த் 'இந்திய ஹாக்கியின் தந்தை' என்ற புகழைப் பெற்றவர். 1928ம் வருஷம் ஆம்ஸ்டர்டாம் ஒலிம்பிக்கிலிருந்து 1936 பெர்லின் ஒலிம்பிக் வரை ஆடி இந்தியாவின் ஹாக்கிப் புகழை உலகில் உயர்த்தியவர். 'ஹாக்கி விளையாட்டில் இவர் ஒரு மந்திரவாதி' என்று அயல் நாட்டார் இவரது ஆட்டத்தைக் கண்டு வியந்தனர். மலேசியாவில் நடந்த மூன்ருவது உலகக்கோப்பைப் போட்டியில் தயான்சந்தின் குமாரர் அசோக்குமார் அபாரமாக ஆடினர்.

உலகக் கோப்பை வெற்றி தேடித் தந்த இந்தியக் கோஷ்டியின் காப்டன் அஜித்பால். இந்திய கோஷ்டிக்கு அனுபவம் மிக்க திறமைசாலி மானேஜர் பல்பீர் சிங். இந்திய ஆட்டக்காரர்களின் திறமையான உத்வேக ஆட்டத்துடன் திரு எம். ஏ. எம். ராமசாமியின் ராசியான தலைமையும் சேர்ந்துதான் கிடைத்தற்கரிய வெற்றியைத் தேடித் தந்தது என்ருல் நீங்களும் ஒப்புக் கொள்ளத்தானே செய்வீர்கள்.





ஹிப்போ கிரேட்ஸ் நோயாளி யைச்சோதிக்கிறார்.

# பா புகளும் மந்திரங்களும்

‘கௌசிகன்’

புராதன கிரேக்கர்கள் வாழ்ந்த இடம் இன்றைய கிரீஸ் நாடு. இங்கு **எபிடாரஸ்** *(Epidaurus)* என்று ஓர் இடம். அங்கு எத்தனையோ இடிபாடுகள். கிரேக்கர்கள் ஒருதேவதையை மருந்துகளின் கடவுளாக வழிபட்டார்கள். **ஆக்ளிபியஸ்** *(Asklipios)* என்பது அந்தக் கடவுளின் பெயர். (நாம் வைத்தியத்துக்கு அதி தேவதையாக வைத்தியநாதரையும், ஜுரத்தைக் குணப்படுத்த ஜ்வர ஹரேஸ்வரர் என்ற கடவுளையும் கும்பிடுகிறோம் அல்லவா? அதுபோல) ஆக்ளிபியஸுக்குப் புராதன கிரேக்கர்கள் ஒரு பெரிய கோயிலையே கட்டி இருந்தார்கள். அந்தக் கோயில் கிட்டத்தட்ட ஓர் மருந்துவமனை போலத்தான். நோயாளிகளுக்கான வார்டுகள், நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற விடுதிகள், மருந்து நீர், எண்ணெய் இவைகளால் குளிப்பாட்டுமிடங்கள். ஆபரேஷன் தியேட்டர்கள் அதாவது அறுவை சிகிச்சைகளை நிகழ்த்துவதற்கான தனியிடங்கள், சில நோய்களை உடற் பயிற்சி மூலம் குணப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் ஜிம்னேஷியம்கள், சிகிச்சை முறைகளைக் கொண்ட குறிப்புக்கள் அடங்கிய வாசக சாலை இத்தனையும் கொண்டதாக இருந்தது அந்தக் கோயில்.

புராதன கிரேக்க நாட்டில் இம்மாதிரியான மருத்துவ மனைகள் நாடு முழுவதும் இருந்தன. இவை கானகங்களை அடுத்தோ, புனிதமான நீரூற்றுக்களின் அருகிலோ அமைக்கப்பட்டிருந்தன. எபிடாரஸிலுள்ள புகழ்பெற்ற ஆக்ளிபியஸின் ஆலயத்துக்கும் அதே மாதிரியான மற்ற ஆலயங்களுக்கும் நோயாளிகளும் காயமுற்றோரும் செல்லுவார்கள். கோயிலின் மருத்துவப் பூசாரிகள் ஆச்சரியமான வகையில் நோயாளிகளைக் குணப்படுத்தி அனுப்புகிறார்கள் என்ற நம்பிக்கை பரவலாக இருந்தது. மருத்துவப் பூசாரிகளுக்கு இத்தகைய மகத்தான திறமை, ‘தந்தையிடமிருந்து மகனுக்கு’ என்று வழி வழியாக வருவதாகவும் நம்பினார்கள் மக்கள்.

எபிடாரஸில் உள்ள ஆக்ளிபியஸ் ஆலயத்தினுள் நுழையும் நோயாளி முதலில் பல விசித்திரமான சடங்குகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டாக வேண்டும். பல நாட்கள் அவன் உணவை உட் கொள்ள அனுமதிக்கப்படமாட்டான். அவனது உடலைப் புனித நீரால் குளிப்பாட்டிப் பிறகு எண்ணெய் தடவுவார்கள். ஆக்ளிபியஸ் தெய்வத்தைத் திருப்திப் படுத்துவதற்காக அந்த நோயாளி ஒரு மிருகத்தைப் பலி தர வேண்டும். இப்படிப் பலி கொடுக்கப்பட்ட மிருகத்தின் தோலுடன் ஒரு சிறிய கட்டடத்துக்கு அனுப்பப்படுவான். அங்கு அந்தத் தோலின் மீது படுத்தபடி ஓர் இரவைக் கழிக்க வேண்டும். அந்தக் கட்டடம் இருள் சூழ்ந்ததாகவும் நிசப்தமானதாகவும் இருக்கும். ஏனென்றால் புனிதமான பாம்பு வரும் மிருதுவான ஓசை நோயாளிக்குக் கேட்க வேண்டும் என்பதற்காகவே. மஞ்சள் நிறம் உடையதும் அபாயமில்லாதது மான இந்தப் பாம்புகளை நோயாளி எடுத்து அதற்கு உணவு தர வேண்டும். ஒரு நோயாளியைத் தேடி இத்தகைய பாம்பு வருமேயானால் அதுவே அதிர்ஷ்

எபிடாரஸ் மருத்துவமனையில் நோயாளியைப் பரிசீலித்தல்




டத்தின் அறிகுறியாகக் கருதப்பட்டது. ஆக்ஸிபியஸ் தெய்வத்தின் அடையாளமே அவர் கையில் ஒரு கோலும் அதைச் சுற்றிக் கொண்டு ஒரு பாம்பும் இருப்பதுதான். இன்றைக்கும் உலகம் முழுவதும் உள்ள டாக்டர்கள் தங்கள் மருத்துவத் தொழிலின் அடையாளமாக இதுபோன்றதொரு குறியையே பயன்படுத்துகின்றனர்.

நோயாளி தனது தூக்கத்தில் கனவு காணுவான். அதில் பல காட்சிகளைப் பார்ப்பான். கட்டளைகளைக் கேட்பான். காலையில் கண் விழிக்கும் போது 'கடவுள் இரவிலே என்னுடன் பேசினார்' என்ற நம்பிக்கையோடு எழுந்திருப்பான். பூசாரி – வைத்தியரை நாடிப் போவான். தான் கண்ட கனவுகளைப் பற்றி அவரிடம் விவரிப்பான். அவன் கண்ட கனவிலிருந்து அவனைக் குணப்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்வார் அந்தப் பூசாரி வைத்தியர்.

தேகப் பயிற்சி, ஓய்வு, போதனைகள், விசேஷ ஆகார முறைகள் இவையே பொதுவான சிகிச்சை முறையாக இருக்கும். நோய் குணமானதும் வியாதியஸ்தர்கள் கோயிலுக்கு நன்கொடைவழங்குவார்கள். கல்லிலே தங்களுடைய நன்றியைப் பொறித்து வைப்பார்கள். சிலர் தங்கள் நோயின் அடையாளங்களையும் அதைக் குணப்படுத்துவதற்குக் கையாண்ட மருந்துகளையும் வழிமுறைகளையும் கல்லிலே செதுக்குவதுண்டு. ஆகவே இத்தகைய கோயில்கள் பல்வேறு நோய்களையும் அதைக் குணப்படுத்தும் வழிகளையும் உடைய கல்வெட்டுகள் அடங்கிய வாசகசாலைகளாகவும் லைப்ரரியாகவும் திகழ்ந்தன.

கிரேக்க நாட்டு வைத்தியர்கள் 'மாஜிக்' என்ற மந்திர சிகிச்சைகளில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்று தெரிகிறது. ஆனாலும் பல்வேறு நோயாளிகளுடன் பழகும் அனுபவம் வைத்திய முறை பற்றிய உண்மையான அறிவையும் சம்பாதித்துக் கொடுத்தது. கி. மு. ஆறுவது நூற்றாண்டில் இத்தாலி நாட்டில் உள்ள **க்ரோட்டன்** *(Croton)* என்னுமிடத்தில் வைத்தியராக இருந்தார், **ஆல்மையான்** *(Almaeon)* என்பவர். மனிதனுடைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் மூளையின் அதிகாரத்தினால்தான் எற்படுகின்றன என்ற முடிவை முதன் முதலில்



எபிடாரஸ் ஆலயத்தில் ஆக்ஸிபியஸ் கடவுள் சிலையின் காலடியில் நோயாளிகள் 'படுத்திருக்கும் காட்சி. மருத்துவப் பூசாரி கடவுள் சிலையிடம் விண்ணப்பமிடுவதையும் காணலாம்.

சென்ற நூற்றாண்டில் வெளியான முதல் தமிழ் நாவலான திரு வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதிய ''பிரதாப முதலியார் சரித்திர''த்தில் உள்ள சுவையான நிகழ்ச்சி ஒன்று எதிர்ப் பக்கத்திலுள்ளது. நாவல்நாயகரான பிரதாப முதலியாரே சொல்லும் இந்த நிகழ்ச்சியை நீங்களும் படித்துச் சுவையுங்கள்.



கண்டவர் இவர்தான். ஆனால் அவருடைய மற்ற கருத்துக்கள் அத்தனை முக்கியத்துவம் பெறவில்லை. உதாரணமாகக் கண்களிலே நெருப்பு இருப்பதாக நினைத்தார். ஆடுகள் தங்கள் காதுகளின் வழியே சுவாசிப்பதாகக் கருதினார் இவர்!

ஆல்மையானுக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு விஞ்ஞான ரீதியான மருத்துவ ஆராய்ச்சி முறை ஆரம்பமாயிற்று. **அகியன்** *(Aegean)* கடலில் **காஸ்** *(Cos)* என்று ஒரு தீவு. இந்தத் தீவிலே ஒருவர் கி. மு. 406ல் பிறந்தார். அவர் பெயர் **ஹிப்போகிரேட்ஸ்** *( Hippocrates )* என்பது. சரித்திரப் புகழ் பெற்ற இந்த அற்புத மனிதரைத்தான் மருத்துவத்தின் தந்தை *( Father of medicine )* என்று மேலை நாட்டினர் அழைக்கின்றனர். தம் காலத்தில் மிகப் பிரபலமான மருத்துவராக விளங்கிய இவரைப் பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. புராதன கிரேக்க நாட்டில் மூலை முடுக்குகளுக்கெல்லாம் போய் நோயாளிகளைக் குணப்படுத்திப் புகழ் பெற்றவராக விளங்கினார் ஹிப்போகிரேட்ஸ். நோய்க்கான மருந்தைக் கொடுக்கு முன் அந்த-நோய்க்கான காரணத்தை அறிய முற்பட்ட முதல்வர் இவர்தான்.

இன்றும் மருத்துவக் கலை பயின்று தொழில் நடத்த வெளிவருவோர் ஹிப்போகிரேட்டின் சத்தியப் பிரமாணங்களை உறுதிமொழியாக *(Hippocrates Oath )* எடுத்துக் கொள்கிறார்கள். அந்த உறுதிமொழிகளில் சில இன்றையச் சூழ்நிலைக்குப் பொருந்தாவிடினும் மருத்துவத் தொழில் புரிவோர் கடைப்பிடிக்க வேண்டியவையாகப் பலவும் உள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளாக டாக்டர்களின் தொழில் துறை சமூக முறை நடவடிக்கைகளில் ஆட்சி செய்து வருகிறது ஹிப்போகிரேட்டின் இப்பிரமாணங்கள். இப்படி அவரது பெயரால் புகழ் பெற்ற இந்தப் பிரமாணங்கள் இவருடைய நோக்கங்களைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும் இவைகளை இவர் வகுக்கவில்லை. இதன் சில பகுதிகள் புராதன எகிப்திய மருத்துவர்களால் வகுக்கப்பட்டவை. வேறு சில ஹிப்போகிரேட்டுக்குப் பின்னால் அவருடைய மாணவர்களால் தொகுத்துச் சேர்க்கப்பட்டவைகளாகும்.

காஸ் தீவிலே பிறந்த ஹிப்போகிரேட்ஸ், மருத்துவக் கலையைப் பயின்றதும் அங்கேயேதான் என்பது சில சரித்திர ஆராய்ச்சியாளர்களின் முடிவு. இதன் பிறகு இவர் தம் சீடர்களுக்கு இந்தக் கலையைக் கற்றுக் கொடுத்தார். காஸ் நகரில் அவர் அமர்ந்து சொற்பொழிவாற்றிய மரத்தடி இன்றைக்கும் அங்குள்ளது.

கிரேக்க நாட்டின் முக்கியப் பகுதிகளில் பிரயாணம் செய்து மருத்துவக் கலையைப் போதித்த ஹிப்போகிரேட்ஸ் ஏதென்ஸ் நகருக்கும் விஜயம் செய்திருக்கிறார். லாரிஸ்ஸா *(Larrisa)* என்னுமிடத்தில் இறந்ததாக நம்பப்படுகிறது. ஆனால் இறந்த ஆண்டு சரியாகத் தெரியவில்லை. இறக்கும்-போது அவருக்கு 85லிருந்து 110 வயதுவரை இருந்திருக்கலாம் என்று கருதுகிறார்கள்.



காரை விற்று 'ஸ்கூட்டர்' வாங்கி ஓட்டிப் பார்த்த பின்னடி
'கடகட'வென்று 'பெட்ரோல்' விலையோ ஏறிப்போச்சு அம்மாடி!
பாதிச் சந்தக் குறைந்த விலையில் வண்டி ஒண்ணு கிடச்சுது
உல்லாசமாய் எங்கும் செல்ல உதவியாவும் இருக்குது.

— குடுக்கையார்

வண்ணப்படம் : **ஹரிகோபால்**

# நடுவில் முடிந்த நாடகம்!

"நானும் என் நண்பர்கள் சிலரும் எங்கள் வீட்டுக்கு எதிரேயுள்ள மைதானத்தில் சில கூத்தாடிகள் இராமாயண நாடகம் நடத்திக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தோம். நாங்கள் நாடகம் பார்க்கச் சென்றபோது இராமரும், சீதையும், இலட்சுமணனும் நகரத்தை விட்டுக் காட்டுக்குப் போகும் காட்சி ஆரம்பமாகி யிருந்தது. அப்போது தசரதர், கோசலை முதலான எல்லாரும் அழுது புலம்பிக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்டவுடன், நான் எனது நண்பர்களிடம், ''அந்தப் பொல்லாத கைகேயியினாலே இராமர் பட்டத்தை இழந்து, காடு போகவும், அதனால் எல்லா மக்களும் மனம் உருகி வாடவும் நேர்ந்துள்ளனவே! இந்த ஒழுங்கற்ற போக்கைப் பார்த்துக் கொண்டு நாம் சும்மா இருப்பது நியாயமா?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ''இந்த அநியாயமான செயலைத் தடுக்க முயற்சிக்காமல், நாம் சும்மா இருப்பது அழகல்ல'' என்று சொன்னார்கள்.

''உடனே, நானும் எனது மற்ற நண்பர்களும் எங்கள் கைகளிலிருந்த கம்புகளுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மக்களின் தலைகளின் மேல் ஏறி மிதித்துக் கொண்டு நாடகசாலைக்குள்ளே நுழைந்து விட்டோம். அங்கே, தன் பிள்ளைக்கு முடிசூட்டு விழா நிகழுமென்ற களிப்புடன் உட்கார்ந்திருந்த கைகேயியை வளைத்துக் கொண்டு, எங்கள் கைகள் சளைக்கிற வரையில் அடித்தோம். கைகேயி அடி தாங்காமல் ''பரதனுக்குப் பட்டம் வேண்டாம்! வேண்டாம்!'' என்று சொல்லிக் கொண்டு ஓட்டம் பிடித்தாள். அப்போது கூனி அகப்பட்டிருந்தால் அவளை எமலோகத்துக்கே அனுப்பி யிருப்போம். காட்டுக்குப் போய்க் கொண்டிருந்த இராமனிடம் சென்று நகரத்துக்குத் திரும்பும்படி சொன்னோம். அதற்கு இராமன், ''தந்தை மொழியைக் காப்பாற்றுவதற்காக நான் காட்டுக்குப் போவதுதான் முறை'' என்றார். ''நீர் போனால் காலை ஒடித்துவிடுவோம்'' என்று கூறி, அவருக்கு அறநெறியை எடுத்துக் காட்டி மெய்ப்பித்தோம். எப்படியெனில், ''சும்மா இருந்த உம்முடைய தகப்பனார் அழைத்து உம்மைப் பட்டம் கட்டிக்கொள்ளும்படி சொல்லி, நீரும் அதற்கு உடன்பட்டு, ஊரெங்கும் முரசறைவித்த பிறகு உமக்குக் கொடுத்த நாட்டைப் பரதனுக்குக் கொடுக்க அவருக்கு அதிகாரம் உண்டா? அப்படி அவர் கொடுத்திருந்தால் அது பொய்யல்லவா? உமக்கு முடிசூட்டப் பட்டால்தான், உம் தந்தையாருடைய உண்மை நிலைக்கும். எனவே ஊருக்குத் திரும்பும்'' என்றேன். இராமர் நான் சொன்ன வாய்மொழியைப் பார்க்கிலும் தடியடிக்கு அஞ்சி, உடனே நகரத்துக்குத் திரும்பினார்! நான் வசிஷ்டர் முதலானவர்களை அழைத்து இராமருக்கு முடிசூட்டு விழா செய்வித்தேன்.

''இவ்வாறு ஏழு காண்டங்கள் கொண்ட இராமாயணத்தை ஒன்றரைக் காண்டத்துக்குள் அடக்கி, இராமரும், சீதையும், லட்சுமணரும் காட்டுக்குப் போகாமலும், தசரதர் இறவாமலும், இராவணன் சீதையைச் சிறையெடுத்தான் என்ற இழிசொல் நேராமலும், இராவணாதிகளை இராமர் கொலை செய்தார் என்ற பழிச் சொல் ஏற்படாமலும், சிறுபிள்ளையாகிய பரதன் அரசாட்சிச் சுமையைத் தாங்கி வருந்தாமலும் செய்து பிரதாப முதலி என்னும் என் பெயரை அன்றே நிலைநிறுத்தினேன்!''


— இரா. கந்தையா




நந்து சுந்து மந்து ②
கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்
நந்துவும் சுந்துவும், பளபளக்கும் அந்த மஞ்சள் மணலை ஆராய்ந்தார்கள். அவர்களைப் போலவே மந்துவும் ஒரு பையில் கூழாங் கற்களை நிரப்பிக் கொண்டது.
விஷயம் தெரிஞ்ச யாங்க கிட்டே காட்டணும்.
ஒரு வேளை நிஜமாகவே இது தங்கம் கலந்த மணலா இருந்தால் நமக்குப் புதையல் கிடைச்சது போலதான்.
அப்போது ஒரு நாடோடித் திருடன் இவர்களைப் பார்க்கிறான்.
இவர்களை வழிப்பறி செய்தால் ஒரு வாரத் துக்க கவலை இல்லாமலிருக்கலாம் போலிருக்கே.
ஏய், நில்லுங்கள் அப்படியே. உங்களிடமுள்ள பொருள்களையெல்லாம் அப்படியே கீழே போடுங்கள். ம்... ஜல்தி...
திருடன் நந்துவையும் சுந்துவையும் மிரட்டிக் கொண்டிருக்கும் போதே மரத்திற்கு நழுவிய மந்து மேலிருந்து தன் கூழாங்கல் மூட்டையை...
...அவன் தலையில் போட...
ஆ, ஐயோ! செத்தேன்...
என்ன திமிர் உனக்கு?...ம் என் எஜமானர்களையா மிரட்டிறாய்...



திருடனைக் கட்டிப் போட்டுவிட்டு, சாந்து கட்டை வெட்டி வர மாந்துவுடன் போகிறான்.
சீக்கிரம் ஓடியா! கோடால் ரொம்பக் கனமா இருக்கு!
திருடனுக்குக் காவலாக மாந்துவை வைத்துவிட்டுக் கூடாரத்தினுள் சாந்துவும் நாந்துவும் தூங்குகிறார்கள். உண்ட களைப் பிலே மாந்துவும் கண்மூட...
ஐயையோ...! இந்தப் பய கட்டை அவிழ்த்து தப்பிச்சுக் கூடாரத்திலே இருந்து ஏதையோ தூக்கிண்டு ஓடறானே!
ம்.. அத்தனை லகுவா என்னை ஏமாத்திட்டுப் போக முடியாதப் பசீன...
மாந்து, மாந்து! விடாதே பயலை, நொறுக்கு. இதோ நாங்களும் வரோம்.
இந்தா வாங்கிக்கோ, ஒண்ணு, ரெண்டு, மூணு! போதுமா? எப்படி இருக்கு?
தொடரும்




பொழுது போக வில்லையா?
போஸ்ட் கார்டு ஒன்று வாங்குங்கள்;
போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள்!





**1. நான் மந்திரியானால்....!** இப்போது கோகுலம் படிக்கும் நீங்கள் இங்கோ, எங்கோ டெல்லியிலோ ஒரு மந்திரியாகலாம் இல்லையா! உங்கள் தலையெழுத்து, அப்படி மந்திரியாகிப் போனால் மக்களுக்கு என்ன செய்வீர்கள்?

**2. கடவுளின் கதை:** கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பார்கள். நீங்கள் இருக்கும் ஊரில் நிச்சயம் கோவில் குடியிருக்கும். அந்தக் கோவி லில் குடியிருக்கும் கடவுளைப் பற்றி ஒரு புராணமும் இருக்கும். அந்தப் புராணக் கதையைச் சுருக்கமாக எழுதுங்கள்.

**3. எங்கள் ஊர்:** ஊரிலே ஆறிருக்கும்; குளமிருக் கும்; குட்டையிருக்கும்; பொட்டலாகவும் இருக்கும். நல்லதும் இருக்கும்; கெட்டதும் இருக்கும். உங்கள் ஊரின் அமைப்பையும் அழகையும் பற்றி எழுதுங்கள்.


**4. நான் படித்த நல்ல புத்தகம்:** பாடப் புத்தகத்தை மூடி வைத்த பிறகு நீங்கள் படித்த வேறு நல்ல புத்த கத்தைப் பற்றி ஒரு சிறு விமரிசனம் போல எழுதுங்கள். மறக்காமல் அந்தப் புத்தகத்தின் ஆசிரியரின் பெயரை யும் புத்தகத்தின் பெயரையும் குறிப்பிடுங்கள். (தமிழ் அல்லது ஆங்கில மொழிப் புத்தகமாக இருக்கலாம்.)

**5. நான் பார்த்த திரைப் படம்:** பார்க்க வேண்டாம் என்றாலும் நீங்கள் கேட்கவா போகிறீர்கள்! அண்மை யில் நீங்கள் பார்த்த ஒரு திரைப் படத்தை விமரிசனம் செய்யுங்களேன்!





**6. அம்மா :** தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை என்று சொல்வார்கள். உங்கள் அம்மா மீது நீங்கள் உயிரையே வைத்திருக்கலாம். அல்லது உங்கள் நன்மைக்காகக் கண்டிப்பும் கருருமாக இருக்கும் உங்கள் அம்மாவிடம் நீங்கள் உர்...ரென்றுமிருக்கலாம். எப்படியானுலும் அந்த அன்பு அம்மாவைப் பற்றி எழுதுங்கள்.



**7. எங்கள் ஊர்த் திருவிழா :** எந்தக் காரியம் நடந்தாலும் தினசரிப் பத்திரிகைகளில் ரிப்போர்ட் செய்கிருர்களே, அதுபோல் உங்கள் ஊர்த் திருவிழா பற்றிப் பனிச்சென்று 'ரிப்போர்ட்' செய்யுங்கள்.



**8. அதிசயம் ஆனல் உண்மை :** உங்களுக்குத் தெரிந்து நடந்த ஒரு விஷயத்தை உங்கள் நண்பனிடம் சொல்லுகிறீர்கள். அதைக் கேட்டு, 'நிஜமாகவா!' 'அப்படியா நடந்தது?' 'நம்பவே முடியவில்லையே!' என்று அவன் கூறுவான். அம்மாதிரி நம்பவே முடியாததொரு சம்பவத்தை எழுதுங்கள்.



**9. நான் கேட்ட நல்ல ஹாஸ்யம் :** நாம் பத்திரிகைகளில் படிக்காத ஆனல் பேச்சுவாக்கில் வெடிக்கும் ஹாஸ்யங்கள் எத்தனையோ உண்டு. அவற்றில் இரண்டே இரண்டை எழுதுங்கள்.



**10. வீட்டில் செய்த விஷமம்:** கோகுலம் படிக்கும் எந்தக் குழந்தையும் விஷமம் செய்யாமல் இருக்க முடியாது. அப்படி நீங்கள் செய்த சுவையான ஒரு விஷமத்தைப் பற்றி எழுதி அனுப்புங்கள்.

## இந்தப் போட்டிக்கான விதிமுறைகளைக் கவனமாகப் படியுங்கள்

- இந்தப் பத்தில் எதைப் பற்றி வேண்டுமானுலும் எழுதலாம். ஒரு கார்டில் ஒரு விஷயத்தைப் பற்றித்தான் எழுத வேண்டும். ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட விஷயங்களை அனுப்பலாம்.

- எழுதும் விஷயம் உண்மையானதாக இருக்க வேண்டும். பரிசு பெறவேண்டும் என்ற ஆர்வத்தில் 'டூப்' விடக்கூடாது.

- கார்டின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதவேண்டும். மறுபக்கத்தில் ஆசிரியர் கோகுலம், சேத்துப்பட்டு, சென்னை-31 என்ற எங்கள் விலாசமும் உங்கள் பெயர், உங்கள் வீட்டு விலாசம், உங்கள் வயது, எதைப் பற்றிய கட்டுரை ஆகியவை மட்டுமே இருக்க வேண்டும்.

- ஒவ்வொரு விஷயத்திலும் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் கார்டுக்கு ரூ. 25 பரிசு உண்டு.

- பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மற்றக் கார்டுகளுக்கும் உரிய சன்மானம் வழங்கப்படும்.

- இது விஷயமாக எந்த விதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வது இயலாது.

- பரிசு, பிரசுர விஷயத்தில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

- பெற்றோர்களுக்கு ஒரு வார்த்தை! உங்கள் குழந்தைகள் எழுதுவதற்கு உதவுங்கள். உதவி என்பது நீங்களே எழுதிக் கொடுப்பதல்ல! அவர்களையே எழுதச் செய்து உங்கள் குழந்தைகளின் திறமையை வளர்க்க முயலுங்கள்.

- கார்டுகள் எங்களுக்கு 31-5-75க்குள் வந்து சேர்ந்துவிடவேண்டும். அதன் பிறகு வரும் கார்டுகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.



# சங்கர் திருந்தினான்

**• பொன்மலை பரிமளம் •**

காலை ஒன்பது மணி. சங்கரின் தந்தை ஆபீஸில் முக்கிய வேலை இருப்பதால் அவசரம் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு வேகமாகப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அவனது அன்னை சமையல் அறையில் எதையோ தேடியவர் ''இங்கே தானே வைச்சேன், எங்கே காணோம்? ஏண்டா சங்கர்....'' என்று குரல் கொடுத்தார்.

''நான் எடுக்கல்லேம்மா'' என்று குரல் கொடுத்தான் சங்கர்.

''என்னத்தைடா நீ எடுக்கல்லே? இங்கே கடுகு டப்பா மேலே இருபது பைசா வச்சேன். அதைக் காணோம். நீ பார்த்தியா?'' அவன்தான் எடுத்திருப்பான் என்று எண்ணிக் கேட்டாள்.

''நான் எங்கே அம்மா சமையல் அறைக்கு வந்தேன்? நான் எடுக்கல்லே.''

''பொய் சொல்லாதே. அப்பா ஆபீஸுக்குப் போறதுக்கு முன்னாடி நீ இங்கு வந்தியேடா.''

''நான் எடுக்கலேன்னு சொல்றேன். அப்புறம்...?'' என்று குரலை அதிகப்படுத்திக் கூச்சலிட்டான் சங்கர்.

''டேய், பொய் சொல்லாதேடா... உனக்குக் காசு வேணும்னு என்னைக் கேட்டு வாங்கிக்கோ. நீயா உன் இஷ்டப்படி யாருக்கும் தெரியாம எடுக்காதே. இன்னைக்குப் பத்துப் பைசா, இருபது பைசா எடுக்கிறதுதான் நாளைக்குப் பெரிய திருட்டுக்கு வழியாகும்.''

''நான் எடுக்கல்லே, எடுக்கல்லேனு சொல்லிண்டிருக்கேன். சும்மா என் மேலே பழி போட வேண்டாம். எங்கே யாவது வச்சுட்டு என்னைக் கேட்கிறது'' என்று கடுகடுத்தான்.


''சரி, சரி. எனக்கு எல்லாம் தெரியும். சங்கர், நீ வரவர ரொம்பக் கெட்டுப் போயிட்டே. காசு எடுத்திருந்தா எடுத்தேன்னு ஒப்புக்கோ. ஏன் இப்படிப் பொய் சொல்றே? **பொய் சொல்ற வாய்க்குப் போஜனம் கிடைக்காதுடா. காசை யாருக்கும் தெரியாமல் எடுத்தா கடவுள் கைமேல் தண்டிச்சுடுவார். இனிமேல் இதுமாதிரி செய்யாதே.''**

அம்மா சொன்னதற்கு அவன் எதுவும் பதில் பேசாமல் டிபன் பாக்ஸை எடுத்துக் கொண்டு பள்ளிக்குச் சென்றுவிட்டான்.

'பொய் சொல்ற வாய்க்குப் போஜனம் கிடைக்காதுடா. யாருக்கும் தெரியாமல் காசு எடுத்தா கடவுள் கைமேல் தண்டிச்சுடுவார்' என்று சங்கரின் தாய் கூறிய வார்த்தைகள் அலை அலையாக அவன் மனத்தில் எழுந்த வண்ணம் இருந்தன.

பள்ளியில் அவனுக்குப் பாடத்தின் மேல் கவனம் செல்லவில்லை. ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கும்போதெல்லாம் அவன் சட்டைப் பையிலிருந்த






ஆஸ்திரேலியாவில் 'நீருள்ள தவளைகள்' என்னும் ஒரு விதத் தவளைகள் இருக்கின்றன. அவை தங்கள் உடம்பில் நீரைச் சேமித்து வைத்திருக்கின்றன. அங்குள்ள ஆதிவாசிகள், தண்ணீர்ப் பஞ்சம் வந்து விட்டால், பூமியில் பதுங்கிக் கொண்டிருக்கும் அந்தத் தவளைகளைத் தோண்டியெடுத்துப் பிழிந்து, அந்தத் தண்ணீரைக் குடிப்பார்கள்:

o o o

முள்ளம் பன்றிக்கு உப்பு என்றால் மிகவும் பிடிக்கும். உப்பு உள்ள எந்தப் பாத்திரத்தையும் பொத்து உப்பை எடுத்து விடும். உப்பு வைத்திருந்த கெட்டியான கண்ணாடிப் புட்டியின் அடிபாகத்தைக்கூட ஒரு முள்ளம் பன்றி ஓட்டையாக்கி உப்பைத் தின்று விட்டது ஒரு தடவை!




அந்த இருபது காசுகள் அவன் அம்மாவின் வார்த்தைகளையே சொல்லிக் கொண்டிருப்பது போன்ற பிரமை அவனுக்கு ஏற்பட்டது.

பகல் ஒரு மணி. 'டாண் டாண்' என்று பள்ளிக்கூடத்தின் மணி ஓசை கேட்டது. பையன்கள் எல்லோரும் மதியம் சாப்பிடுவதற்காக வகுப்பிலிருந்து வேகமாக டிபன் பாக்ஸுடன் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். சங்கரும் டிபன் பாக்ஸை எடுத்துக் கொண்டு வகுப்பு அறையிலிருந்து வெளியே வந்தான். அப்போது அவனுக்கு எதிரே வந்த ஒருவன் அவன் மீது திடீரென்று மோதவே சங்கரின் டிபன்பாக்ஸ் கீழே விழுந்து அதிலிருந்த தயிர் சாதம் அப்படியே வெளியே கொட்டிவிட்டது.

''சாரிடா, சங்கர்!'' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டான், அவன் மீது மோதியவன்.

கீழே விழுந்து பாழாய்ப் போன தயிர் சாதத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் சங்கர்.

**'பொய் சொல்கிற வாய்க்குப் போஜனம் கிடைக்காதுடா. யாருக்கும் தெரியாமல காசு எடுத்தால் கடவுள் கைமேலே தண்டிச்சுடுவார்'** என்று அவன் அம்மா கூறியது மறுபடியும் நினைவுக்கு வந்தது.

கீழே கிடந்த தயிர் சாதத்தை எடுத்து அங்கே நின்று கொண்டிருந்த நாய்க்கு வைத்துவிட்டு டிபன் பாக்ஸைத் தண்ணீர்க் குழாயில் கழுவினான்.

பையன்கள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவனுக்குப் பசி அதிகமாக எடுத்தது.

பள்ளிக்கு வெளியே மரத்தடியில் ஐஸ் புரூட் விற்பவன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்த சங்கர் அவனிடம் சென்று அந்த இருபது பைசாவைக் கொடுத்து ஒரு ஐஸ் புரூட் வாங்கினான்.

**'பொய் சொல்ற வாய்க்குப் போஜனம் கிடைக்காதுடா. யாருக்கும் தெரியாமல் காசு எடுத்தால் கடவுள் கைமேலே தண்டிச்சுடுவார்'** என்று தன் அன்னை கூறிய சொல் மீண்டும் அவன் நினைவுக்கு வந்தது.

'பொய் சொல்ற வாய்க்குப் போஜனம் கிடைக்காதாம். ஏதோ நான் டிபன் பாக்ஸ் எடுத்துண்டு வரப்போ எதிரிலே வந்தவன் மோதிட்டான். கடவுள் தண்டிப்பாராமே' என்று தனக்குத் தானே சமாதானம் பேசிக் கொண்டு ஐஸ் புரூட்டைச் சுவைத்துச் சுவைத்து உறிஞ்சிக் கடைசியில் அந்தக் குச்சியைத் தூக்கி எறிந்தான்.

மாலை நான்கு மணி. பள்ளிக்கூடம் விட்டதும் வேகமாக வீட்டுக்கு வந்தான் சங்கர். பசி அதிகமாக இருந்ததால், ''அம்மா, எனக்கு என்ன டிபன் பண்ணியிருக்கே!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான்.

குளியலறையில் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்த அவனது அன்னை ''சமையல் அறையிலே மூடி வைச்சிருக்கேன். எடுத்துக்கோ'' என்றார்.

''எங்கேம்மா இருக்கு? இங்கே இல்லையே'' என்று சமையல் அறையில் அவன் அம்மா மூடி வைத்திருக்கும் பலகாரத்தைத் தேடினான்.

''நான் இங்கே துணி துவைத்திண்டிருக்கேண்டா. நன்னாப் பாருடா சங்கர்'' என்று குரல் கொடுத்தாள் அவன் அம்மா.

சமையல் அறையில் ஒவ்வோர் இடமாக ஆராய்ந்தவன் நெய் பாட்டிலின் மீது ஒரு நாலணா இருப்பதைப் பார்த்தான். யாருக்கும் தெரியாமல் காசுகளை எடுத்துப் பழக்கப்பட்ட கை துருதுருவென்று துடித்தது. 'அம்மா குளியலறையிலிருந்து வந்து விடுவார்களோ என்ற பயத்தில் சமையலறை வாசல் பக்கம் பார்த்துக் கொண்டே நெய் பாட்டிலின் மேலிருந்த காசை அவன் எடுக்க முயலும்போது அந்தக் காசு நழுவிப் பக்கத்திலிருந்த கடுகு டப்பாவின் பக்கம் போய் விழுந்தது. உருண்டு

விழுந்த அந்த நாலணாவை எடுக்க அவசரமாகக் கடுகு டப்பாப் பக்கம் கையை விட்டுத் தேடியவன், ''ஆ... ஐயோ, அம்மா!'' என்று அலறினான்.

''என்னடா சங்கர், என்ன?'' என்று பதறியவளாக அவன் அம்மா குளியலறையிலிருந்து சமையலறைக்கு ஓடி வந்தாள்.

''ஐயோ... வலி கொல்லறதே.... கடுக்கிறதே'' என்று அலறிக்கொண்டே கையை உதறிக்கொண்டு அழுதான் சங்கர்.

''என்னடா ஆச்சு, என்ன?''

''என்னமோ கொட்டிடுத்தும்மா. கையெல்லாம் எரியற மாதிரி இருக்கு..'' என்று புலம்பினான்

அவன் துடிப்பதைக் கண்ட அவன் அம்மா கடுகு டப்பாவை மெதுவாக நகர்த்திப் பார்க்கும்போது ஒரு தேள் குஞ்சு சுருட்டிக் கொண்டு அங்கு இருந்தது. அதன் பக்கத்தில் ஒரு நாலணாக் காசும் இருப்பதைப் பார்த்தாள்.

''அடடா, தேள் கொட்டிடுத்துப் போலிருக்கு!'' என்று சொல்லிக் கொண்டே அந்தத் தேளை இடுக்கியால் பிடித்து வெளியே குப்பைத் தொட்டியில் அடித்துப் போட்டுவிட்டு, ''ஏண்டா, சங்கர், அங்கேஏன் போனாய்?'' என்றாள்.

''என்னம்மா நீ? நானே வலி தாங்காமத் துடிக்கிறேன், என்னைக் கேள்வி கேட்கிறாயே?'' என்று கத்தினான்.

''சரி...சரி... டாக்டர் வீட்டுக்கு வா. அந்த நாலணாவை எடுக்க முயற்சி பண்ணினே. கடவுள் தண்டிச்சுட்டார்'' என்று கூறிக்கொண்டே அவனைப் பக்கத்தில் இருக்கும் டாக்டர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். டாக்டர் தேள் கடிக்காக ஓர் ஊசியைப் போட்டு ஏதோ ஒரு மருந்தை அவன் விரலில் பூசிவிட்டார். சங்கருக்கு வலி கொஞ்சம் குறைந்தது போலிருந்தது.

வீட்டுக்கு வந்ததும் ''அம்மா! என்னை மன்னிச்சுடும்மா. நான் இனிமேல் நீ சொல்றபடி நடப்பேன். பொய் சொல்ல மாட்டேன். யாருக்கும் தெரியாமல் காசைத் திருடமாட்டேன். காலையிலே காசை நான் எடுக்கல்லேன்னு பொய் சொன்னேன். பள்ளிக்கூடத்திலே டிபன் பாக்ஸ் கீழே விழுந்து சாப்பிட முடியாமல் போயிடுத்து. இப்ப நாலணாவை எடுக்கப் பார்த்தேன். கையிலே தேள் கொட்டிடுத்து. இனிமே நான் பொய் சொல்ல மாட்டேன், திருடவும் மாட்டேன்'' என்று கண்ணீர் விட்டான் சங்கர். தன் குழந்தைக்குத் தேள் கொட்டினதில் அவன் அம்மாவுக்கு வருத்தம்தான் என்றாலும் அவன் திருந்தியதில் ரொம்ப சந்தோஷம்.




"ஒரே ஜலமாக் கொட்டறது டாக்டர்."

உறக்கச் சொல்லாதீர் அம்மா; குடத்தோடு கூட்டம் சேர்ந்துடப் போறது!

"என்ன இது ஒரே வாத்தியார் கூட்டமா இருக்கு?"

"சார், உங்க பையன் வாத்தியாருக்கெல்லாம் தண்ணி காட்டப் போறேன்னு சொன்னதாகக் காதில் விழுந்தது. அதை நம்பித்தான் வந்திருக்கோம்."

"அட ராமச்சந்திரா! வழக்கமா சனிக்கிழமை தேய்த்துக்கொள்ளும் எண்ணெயைத் தேய்த்துக் கொண்டு சொட்டச் சொட்ட நிக்கறீங்களே? தண்ணிருக்கு எங்கே போவீங்க?"

கட வித்வான்: கச்சேரிக்கு என்னைப் போட்டுக்கொள்ள மாட்டேங்கறேளே!

பாடகர்: கச்சேரிக்கு வரும்போது பானை நிறைய ஜலம் கொண்டு வருவதாக உறுதி கூறினால் தாராளமாய் உங்களையும் போட்டுக்கறேன்.



# திருஷ்டியும் - சிருஷ்டியும்

கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் பரீட்சைகளெல்லாம் முடிந்துவிட்டதில்லையா ? ஆகவே, இதோ வந்துவிட்டார்கள்.

கிட்டு, இன்னிக்கு என்ன ''மாஜிக்' செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான் சீனு.

''அதுவா ?'' என்ற கிட்டு ஒரு காகிதத்தில் எதையோ எழுதி சீனுவின் பைக்குள் போட்டான். பிறகு, ''இப்போது நீ போடப் போகும் ஒரு கணக்கின் விடையை நான் முன்கூட்டியே அந்தக் காகிதத்தில் எழுதி உன் பையில் போட்டுவிட்டேன், தெரிந்ததா? நீ அந்தக் கணக்கைப் போட்டதும் என் விடையும் உன் விடையும் ஒன்றுதானா என்பதைச் சரி பார்த்துக் கொள்'' என்றான்.

''என்னடாது, அதிசயமாக இருக்கு? இந்த யட்சிணி வேலையெல்லாம் எங்கே, கத்துண்டே ? ம்... சரி சரி, கணக்கைச் சொல்லு.''

''மூன்று ஸ்தானத்தில் இறங்கு வரிசையில் ஒரு எண்ணை நினைத்துக் கொள். இறங்கு வரிசையில் என்றால் தெரியும் இல்லையா? 831 என்பது இறங்கு வரிசை 138 என்பது ஏறு வரிசை.''

''சரி, குறித்துக் கொண்டேன் '' என்ற சீனு 742 என்று எழுதிக் கொண்டான்.

''எழுதியுள்ள எண்ணைத் திருப்பிப் போட்டு அதில் கழி.''

''கழித்தாயிற்று'' (742—247=495) ''வந்துள்ள விடையை முன் போலவே திருப்பிப் போட்டு அத்துடன் கூட்டு.''

''இதென்ன பித்துக்குளித்தனம் ? சரி, அப்படியே செய்தாயிற்று'' — 495+594=1089)

''உன் பையில் நான் போட்டுள்ள காகிதத்தை எடுத்துப் பார். அதில் உனக்கு வந்துள்ள விடை இருக்கும்'' என்றான் கிட்டு. சீனு தன் பையிலிருந்த காகிதத்தைத் தோழர்களின் முன்னால் பிரித்துப் பார்த்த போது எல்லாருடைய விழிகளும் பிதுங்கின.

'' அப்பனே ! உனக்கு ஏதாவது ஞான திருஷ்டி உண்டா ? அதெப்படி முன்கூட்டியே இந்த விடையை உன்னால் அறிய முடிந்தது?'' என்று கேட்டார்கள் தோழர்கள்.

''ஞான திருஷ்டியும் இல்லை, ஊனதிருஷ்டியுமில்லை. மூன்று ஸ்தான எண்களுக்குள் இந்த மாதிரி எந்தக் கணக்குப் போட்டாலும் அதன் விடை 1089 தான். புரிந்ததா ?'' என்ற போது அவன் தோழர்கள் 'அட, இதுதானா, மாஜிக்?'' என்றார்கள்.

''ஆமாமா ரகசியம் தெரிகிறவரையும் அதிசயம், தெரிந்த பிறகு அலட்சியம், அப்படித்தானே ?'' என்ற பட்டு, ''இதோ, நான் ஒரு மாஜிக் செய்து காட்டுகிறேன்'' என்றவள் வண்ண வண்ணமான பித்தான்களை நிறைய மேஜை மீது போட்டாள். பிறகு ''இந்தப் பித்தான்களில் ஒரு பிடி அள்ளிக் கொள் பத்மா'' என்றாள் பட்டு. பத்மாவும் ஒரு கைநிறையப் பித்தான்களை எடுத்துக் கைகளை மூடிக் கொண்டாள். பட்டுவும் சில பித்தான்களைப் பொறுக்கிக் கொண்டாள். பிறகு, ''பத்மா, உன் கையில் உள்ள பித்தான்களை எண்ணிப் பார். அது ஒற்றைப் படை எண்ணாக இருக்குமானால் இதோ என் கையில் உள்ள பித்தான்களை அத்துடன் சேர்த்து அதை இரட்டைப் படை எண்ணிக்கையாக்கி விடுவேன். அல்லது உன்

னிடம் உள்ள பித்தான்களின் எண்ணிக்கை இரட்டைப் படையாகவே இருக்குமானால் அதை என்னிடம் உள்ள பித்தான்களைச் சேர்ப்பதினால் ஒற்றைப் படை எண்ணிக்கையாக்கிக் காட்டுவேன்'' என்றாள்.

'' உன் பித்தான்களுக்கு மட்டும் என்ன அத்தனை மகத்துவம்? எங்கே பார்க்கலாம்'' என்று பத்மாவும் தன்னிடம் உள்ள பித்தான்களை எண்ணினாள். பட்டு தன்னிடம் உள்ளதை அத்துடன் சேர்த்தபோது அவள் கூறியபடியேதான் ஆயிற்று.

''அதெப்படி, அதெப்படி?...'' என்று அத்தனை பேர்களும் சூழ்ந்து கொண்டார்கள் பட்டுவை.

முதலில் பிகு பண்ணிக் கொண்ட பட்டு பிறகு' ''நான் எடுத்துக் கொள்ளும் பித்தான்களின் எண்ணிக்கை எப்போதுமே ஒற்றைப்படையாகத்தான் இருக்கும். இதுதான் ரகசியம். இரட்டைப்படை எண்ணிக்கையோடு ஒற்றைப்படை எண்ணிக்கையைக் கூட்டினால் வருவது ஒற்றைப்படை எண்ணிக்கைதான். அதே மாதிரி ஒற்றைப்படை எண்களோடு ஒற்றைப்படை எண்களைக் கூட்டும் போது கிடைப்பது இரட்டைப்படை தான்'' என்றாள்.

''ப்பூ, இவ்வளவுதானா ?'' என்று அவர்கள் சொல்லவில்லை, நினைத்துக் கொண்டார்கள்!

**“ச**ரி, மாஜிக் போதும். ஏதாவது நல்ல விளையாட்டு விளையாடலாமே ?'' என்ற கிட்டு எதிரிலிருந்த சுவரில் கரித் துண்டினால் ஒரு புலியை வரைந்தான். பிறகு அதன் கீழே ஐந்து வேலிகளை அடுத்தடுத்து வரைந்தான். கடைசியில் ஆட்டுக்குட்டியைப் போட்டு அதை சுற்றி ஐந்து முளைகளை வரைந்து ஐந்து கயிற்றினால் ஆட்டுக்குட்டி முளைகளோடு கட்டப்பட்டிருப்பதாகவும் வரைந்தான்.

'' இந்த ஆட்டுக்குட்டியைப் புலி சாப்பிட வேண்டுமானால் இந்த ஐந்து வேலிகளையும் கடந்து வந்தாக வேண்டும். இனி விளையாட்டை ஆரம்பிக்கலாம். நான்தான் லீடர். என்னைத் தவிர எத்தனை பேர் இருக்கிறீர்கள்? பத்துப் பேரா? கட்சிக்கு ஐந்து பேராக இரு கட்சிகளாகப் பிரிந்து கொள்ளுங்கள். இந்த விளையாட்டை இரண்டு பேரிலிருந்து பத்துப் பேர் வரை விளையாடலாம். ஒரு கட்சி புலி. இன்னொரு கட்சி ஆடு. நான் சின்னச் சின்ன கேள்விகள் போடுவேன். எந்தக் கட்சியைப் பார்த்துக் கேட்கிறேனோ அவர்கள் அதற்கு விடை கூற வேண்டும். ஒவ்வொரு கட்சியையும் நான் மாற்றிமாற்றிக் கேட்பேன். புலிக் கட்சி சரியான விடையைக் கூறி விட்டால் வேலியில் ஒன்றை அழித்துவிடலாம். அதாவது புலி அதைத் தாண்டி விட்டதாக அர்த்தம். ஆட்டுக் கட்சி சரியான விடையைக் கூறி விட்டால் ஆட்டைக் கட்டியுள்ள ஒரு கயிற்றைஅழித்து– அறுத்துவிடலாம். ஆடு கட்டுக்களை அறுத்துக் கொண்டு புலியிடமிருந்து தப்பப்பார்க்கும். அதே சமயத்தில் புலி வேலிகளைக் கடந்துஆட்டைச் சாப்பிட ஓடிவரும். இதுதான் இந்த ஆட்டத்தின் சுவாரசியம். எந்தக் கட்சி தன்முயற்சியில் வெற்றி பெறுகிறதோ அதுவே வெற்றி பெற்ற கட்சி'' என்று விளக்கினான் கிட்டு.

''கோகுலத்தில் வரும் 'தெரியுமா? தெரியுமே'– பகுதியை எல்லோரும் படித்திருப்பீர்களே! அதிலிருந்துதான்வினாக்களைப் போடப் போகிறேன். நீங்கள் விடைகளைக் கூறுங்கள். ஆடு புலி ஆட்டமும் விறுவிறுப்பாக இருக்கும்'' என்றான் கிட்டு. ''குட் ஐடியா!'' என்று ஆமோதித்தார்கள் நண்பர்கள். இந்தச் சுவாரசியமான விளையாட்டை நீங்களும் விளையாடி மகிழலாமே!

— வாண்டு

முதல் பக்க விடைகள்:


1. மலேயா நாட்டுக்கு உரியது இவ்வாள். இதன் பெயர் கிரிஸ் (Kris).

2. புராதன பிரிட்டிஷ் மக்கள் தானியங்களை அரைக்கப் பயன்படுத்திய கல் இயந்திரம்.

3. ராகூன் (Racoon).


4. பறவையின் பெயர் இபிஸ் (Ibis.)

5. A. கொழும்பு. B. கண்டி. C. திரிகோணமலை.



# மலரும் பூவெனப் பிள்ளை
# வளர்ந்திடப் பலமான துணை—
# இன்க்ரிமின்* டானிக்

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவளுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவள் வளர்ச்சியை! பசித்துப புசிப்பாள்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகளின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.




# இன்க்ரிமின்* டானிக்

**உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்**
**உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!**

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்


175 ml.
Incremin
syrup
VITAMINS $B_1$, $B_6$, $B_{12}$
LYSINE
WITH IRON
TONIC APPETITE
STIMULANT


ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: விநு.
38
ராவண வதத்தினால் எங்கள் பயத்தைப் போக்கி அருளியதற்கு நன்றியாக நாங்கள் ஏதாவது செய்ய விரும்புகிறோம்.
சஞ்சீவி பர்வதம் போன பிறகு பல வானரர்கள் மாண்டு விட்டனர். மீண்டும் அவர்களை உயிர்ப்பித்துக் கொடு. அவர்கள் ஆயுள் உள்ளளவும் கனிகளும் நீரும் குறைவின்றிக் கிடைக்கச் செய்.
அவ்வண்ணமே ஆகுக.
அண்ணலின் கருணையே கருணை. குரங்குகளான எங்கள் பொருட்டல்லவோ இந்திரனிடம் வரம் கேட்டார்.
அயோத்திக்குத் திரும்பவேண்டுமென்று இராமன் விபீஷணனிடம் கூற, அவன் புஷ்பக விமானத்துடன் வருகிறான்.
இதில் ஏறி நாளையே அயோத்தியை அடைந்து விடலாம். நம் எல்லாருக்கும் இடம் தரும். இதில் நானும் வானரர்களோடு உடன் வந்து தங்களது முடிசூட்டு விழாவைக் காண்பேன்.
புஷ்பக விமானத்திலேறி பாரதத்தின் தென் முனைக்கு வந்த இராமன் அங்கு இறங்குகிறான்.
முன்பு கடலில் அணை கட்ட இங்குதான் பரம சிவனின் அருள் கிடைத்தது. அவருக்கு நன்றியறிதலாக இங்கு பூஜை செய்ய விரும்புகிறேன்.


மாருதி! இன்று முகூர்த்தம் மிக நன்றாக உள்ளது. நீ உடனே காசிக்குப் போய் விசுவநாதராகிய சிவனைக் கண்டு இங்கு நான் பிரதிஷ்டை செய்ய ஒரு லிங்கம் பெற்று வா.
ககன மார்க்கத்தில் செல்கிறார் மாருதி.
என் குழந்தாய் வாவா! சௌக்கியமா?
தென் கோடியில் பிரதிஷ்டை செய்யத் தங்களிடமிருந்து ஒரு லிங்கம் பெற்று வர அண்ணல் அனுப்பினார்.
சிவதரிசனத்தில் மெய் மறந்து அப்படியே தியானத்தில் ஆழ்ந்து விடுகிறார் அனுமார். அங்கே சேதுக் கரையில் ........
முகூர்த்தம் தப்பி விடும் போலிருக்கிறதே. இன்னும் மாருதியைக் காணோமே... ம்... சீதே இனியும் தாமதிப்பதற்கில்லை. கடற்கரை மணலைக் குவித்து லிங்கத்தைப் பிடி. கற்பரசியான உன் கையில் அது லிங்கமாகக் கூடிக் கொள்ளும்.
சீதை பிடித்த லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்த அதே சமயத்தில் அனுமான் விசுவநாத லிங்கத்துடன் வருகிறார்.
என்னிடம் ஒப்படைத்த காரியத்தை முடிக்காமல் இருப்பதா? அதற்குள் தாங்கள்....
ஆஞ்சநேயா! தப்புத்தான். இந்த மண் லிங்கத்தை அப்புறப்படுத்தி விடு. அதன் பிறகு நீ கொண்டு வந்துள்ள லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்கிறேன்.
பலவாறு முயன்றும் மண் லிங்கத்தை பலவானான அனுமானாலும் பெயர்க்க முடியவில்லை. வாலைக் கட்டி இழுக்க, வால் அறுந்து விடுகிறது.
பிரபோ ராமா! அகம்பாவத்தினால் அறிவிழந்தேன். உன் அருள் வலிமையால் இத்தனை காரியங்களையும் சாதிக்க முடிந்தது. அதை மறந்து செருக்குற்ற என்னை மன்னித்து விடுங்கள்.
ராமன் அனுமானின் அறுபட்ட வாலைத் தொட அது கூடிக் கொள்கிறது.
நீ என்றும் அடக்கத்தின் உருவாகவே இருப்பாய். இம்மண் லிங்கத்தின் அருகிலேயே காசி லிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து விடுகிறேன்.
ராமன் பிரதிஷ்டை செய்த மண்லிங்கம் ராமநாத ஸ்வாமியாகவும் அனுமான் பிரதிஷ்டை செய்த காசிலிங்கம் விசுவநாதராகவும் இன்றும் இராமேசுவரத்தில் பக்தர்களுக்குக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.
தொடரும்

# கவச மீன்களும் காடுகளும்

கிருஷ்ணவேணி

நீண்ட நெடுங்காலத்துக்கு டிரைலோபைட்டுகளுக்குப் போட்டியாக வேறு ஜீவராசிகள் எதுவும் தோன்றவில்லை. கடலில் டிரைலோபைட்டுகளின் ஆதிக்கமே மேலோங்கி நின்றாலும் மெள்ள மெள்ள ஸெஃபலோபாடுகளின் கை ஓங்கலாயிற்று. டிரைலோபைட்டுகளையும் விட மிகப் பெரியதாக வளரலாயின ஸெஃபலோபாடுகள். நேரான கிளிஞ்சல் ஓடுகளுடன் இருபதடி நீளம் வரைகூட ஸெஃபலோபாடுகள் வளர்ந்தன. இவை மாமிசப் பட்சிணிகள். ஆகவே தங்கள் அருகேயுள்ள டிரைலோபைட்டுகளை ஏராளமாகச் சாப்பிட்டன. டிரைலோபைட்டுகளைப் போலவே இவை ஒரு மிலியன் நூற்றாண்டுகள் கடலில் ஆதிக்கம் செலுத்தின.

ஸெஃபலோபாடுகளின் ஆதிக்கத்தின் போதும் அதன் பிறகு பல மிலியன் ஆண்டுகளும்கூட டிரைலோபைட்டுகள் வாழ்ந்து வந்தன. பிறகு உத்தேசமாக இருநூறு மிலியன் ஆண்டுகளுக்கு முன்னால் இவை யாவும் அழிந்து ஒழிந்தன. இதே போல் ஸெஃபலோபாடுகளில் முதன் முதலில் தோன்றிய பல வகைகளும் மறைந்தன.

இன்றைய கடற்கரைகளில்தான் இங்கு கூறப்படும் ஜீவராசிகள் வாழ்ந்தன என்று நினைத்தால் அது தவறு. இன்று நாம் காணும் கடலும் நிலமும் ஆதியிலும் இப்படியே இருந்தன என்று நினைப்பதும் தவறு. உதாரணமாக இன்று அமெரிக்காவின் இலினாய்ஸ், இந்தியானா, கான்ஸாஸ் ஆகிய இடங்களெல்லாம் கடற் கரைகளாக இருந்தனை. இதே மாதிரி இன்று உலகின் பல பகுதிகள் நிலமாக இருப்பவை அன்று கடல்களாக இருந்தன.


டிரைலோபைட்டு, ஸெஃபலோபாடு ஆகியவை ஆட்சி புரிந்த காலத்தை 'முதுகெலும்பு இல்லாத பிராணிகளின் பொற் காலம்' என்று கூறுவது உண்டு. இவை வாழ்ந்த போது இவற்றின் அண்டை வீட்டுக்காரர்களாக வாழ்ந்த ஜீவராசிகளுக்கும் முதுகெலும்பு இருக்கவில்லை. ஏன், எலும்புகளே கிடையாது. எலும்புக்கூடு என்று கருதப்பட்ட அமைப்பு உடலுக்கு வெளியேதான் இருந்தன.

ஆராய்ச்சியாளர்கள் உலகின் வயதைப் பல்லாயிரம் ஆண்டுகள்கொண்ட பல கட்டங்களாகப் பகுத்திருக்கிறார்கள். இவற்றுக்கு 'ஈராஸ்' (Eras) சகாப்தங்கள் என்று பெயர். 'இன்வெர்ட்டபிரேட்' (Invertabrate) எனப்படும் முதுகெலும்பில்லாத பிராணிகள் வாழ்ந்த காலத்தை பாலியோஸாய்க் ஈரா (Paleozoic Era) என்று அழைக்கிறார்கள். பாலியோஸாய்க் என்றால் மிகப் புராதனமான வாழ்க்கை என்று பொருள்.

பாலியோஸாய்க் சகாப்தத்தின் ஆரம்ப நிலை மிக மிக அமைதியான காலம். அதாவது உலகத்தின் அந்தக் காலத்தில் பிராணிகளின் எவ்வித சப்தமும் கேட்டதில்லை. பூமியின் மீது ஓடக் கூடிய பிராணிகள் எதுவும் இல்லாத காலம் அது. அந்தச் சகாப்தத்தில் ஒலி என்பது இடியினாலும் கடல் அலைகளினாலும், காற்றினாலும் மட்டுமே ஏற்பட்டவை.

முதன் முதலில் முதுகெலும்போடு தோன்றிய ஜீவன் மீன்கள்தாம். தங்களுடைய ஆட்சியினால் கடலையே நடுங்க வைத்துக் கொண்டிருந்த ஸெஃபலோபாடுகளின் காலத்தின் பிற்பகுதியில் தோன்றியது மீன் இனம். ஆரம்பத்தில் இம்மீன்கள் வெற்றிகரமாகவே முன்னேறின. ஐம்பது மிலியன் ஆண்டுகளுக்குள் ஏராளமாகப் பெருகி, மற்ற எளிய பிராணிகளையெல்லாம் மிஞ்சிவிட்டன.

ஆரம்ப மீன்களில் பலவற்றின் உடல், எலும்பு போன்ற ஒரு வகை அமைப்பால்



மூடப்பட்டிருந்தன. இவைகளுக்குத் தற்காப்பு உறுப்பாகவும் அவை விளங்கின. ஆதி மீன்கள் பலவற்றுக்குத் தாடைகள் கிடையா. அவற்றில் பல இன்றைய சுறா மீனின் சந்ததிக ளாக இருந்தன. சில மீன்களுக்கு நுரையீரல் இருந்தன. இம் மாதிரியான மீன்கள் சுவாச கோசங்களினாலும் — செவுள்களி னாலும் சுவாசித்தன. ஏராளமான நீர் இருக்கும் போது சாதாரண மீன்களைப்போல் நீரினுள் செவுள்களால் சுவாசித் தன. நீர் வற்றி வறண்ட நிலை வந்தபோது இவை சேற்றினுள் புதைந்து கொண்டு நுரையீரலினால் சுவாசித்தன.


டைனிசிதிஸ் (*Dinicythis*) என்பது கவச மீன் இனங்களுள் ஒன்று. இவை பயங்கரமான மீன்கள். இருபதடி நீளமும் கூரிய முனைகளோடுகூடிய ஏராளமான பற்களைக் கொண்ட தாடைகளையும் உடையது இவ்வகை மீன்கள். இந்த வாயை மிக வேகமாகப் படீரென்று திறந்து மூடும் லாகவமும் உடை யது. இத்தனை பெரியதாகவும் பயங்கரமானதாகவும் இருந் தும்கூட இதனால் நிலையாக அதிக காலம் நீடித்து வாழ முடிய வில்லை. இன்று நாம் காணும் மீன்களைப் போன்ற ஏராள மான மீன்கள் கூட்டம் டைனிசிதிஸ் இன மீன்களை இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டன.

சுறா மீன்களும், நுரையீரல்களோடு கூடிய மீன்களும் மிகக் குறைவாகவே இருந்தன. அவைகளாலும் நீண்ட காலத்துக்கு உலகை ஆள முடியவில்லை. இப்படியாக உலகின் மீன்களின் பொற்காலம் முடிந்தது.

!மீன் யுகத்தை அடுத்து நிலக்கரி யுகம் தொடர்ந்தது. இதுவும் — பாலியோஸாக் மிகப் புராதனமான காலத்தின் ஒரு பகுதிதான்.

நிலக்கரி யுகத்தின் ஆரம்ப காலத்தில் பூமியில் இன்றுள்ள நிலப்பரப்புக்களில் பல தாழ்வாகவும் சதுப்பு நிலங்களாகவும் இருந்தன. இத்தகைய சதுப்பு நிலங்களில் காடுகள் தோன்ற லாயின. இக்காடுகளில் ஏராளமான தாவரங்கள் செழித்து வளர்ந்தன. சீதோஷ்ண நிலை மிதமாகவும் வானமும் பூமியும் மிகவும் நைப்புடையதாகவும் இருந்ததினால் தாவரங்கள் செழிக்கலாயின. வளர்ந்த மரங்கள் பட்டுப் போய்ச் சதுப்பு நிலங்களிலேயே விழுந்தன. இப்படி விழுந்த மரங்கள் முழு மையாக மக்கிவிடவில்லை. சதுப்பு நிலப் பரப்புகளுக்குக் கீழே இவ்வகைத் தாவரங்களின் சேர்க்கையினால் கெட்டி யான தளம் போன்ற அடிப் பரப்பு உருவாயிற்று. பல சதுப்பு நிலப் பிரதேசங்களில் நீர்மட்டம் வர வர உயர லாயிற்று. நிலம் மெதுவாகக் கீழே அழுந்துவதினாலும் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம். இப்படிப்பட்ட மாற்றம் மிக மிக மெதுவாகவே நிகழ்ந்தது. ஆனாலும் முடிவில் ஒரு காலத்தில் காடுகள் எல்லாம் நீரினுள் மூழ்கின. இப்படி மூழ்கிய மரங்கள் முன்பே பட்டு விழுந்து மேடிட்டுக் கிடக்கும் மரங்களோடு சேர்ந்து கொண்டன. இப்படிப்பட்ட தாவரச் சேர்க்கையின் மீது கடல் நீர் மண்ணையும் சேற்றையும் கொண்டு வந்து ஒதுக்கி, ஒதுக்கி அவற்றை மூடின.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு நீரில் மூழ்கிய பழைய சதுப்பு நிலங்களின் மீதிருந்த தண்ணீரெல்லாம் வடியலா யிற்று. அப்போது மீண்டும் அங்கு காடுகள் தோன்றலாயின. கால ஓட்டத்தில் இப்படித் தோன்றிய கானகங்கள் மறு படியும் நீரினுள் மூழ்கிச் சேற்றிலே புதையுண்டன. பல் லாயிரம் ஆண்டுகள் இப்படிக் காடுகளின் தோற்றமும் அழிவும் மாறி மாறி நடந்து கொண்டே யிருந்தன. கடைசி யாக இப்படிப் புதையுண்ட கானகங்களின் பல அடுக்குகள் உலகின் பல பாகங்களில் தோன்றலாயின. இந்தத் தாவர அடுக்குகளை நிலக்கரியாக மாற்ற உலகத்துக்குப் பல மில்லியன் ஆண்டுகள் தேவைப்பட்டன.



இங்கு நீங்கள் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். பண்டைய உலகின் சதுப்பு நிலங்களில் தோன்றிய காடுகளில் வாழ்ந்த மரங்கள் இன்று நீங்கள் காணும், சவுக்கு, தேக்கு, சால், ஆல், பைன் போன்ற மரங்கள் அல்ல. இன்றுள்ள எந்த மரங்களைப் போலவும் அவை இருக்கவில்லை. ஆதி காலத்துத் தாவரங்கள் எல்லாமே க்ளப் மாஸ் (**Club Moss**) எனப்படும் ராட்சத உருவில் உள்ள தாவரங்கள்.

'ராட்சத மிருகங்கள் என்ற தலைப்புக் கொடுத்துவிட்டு அப்படி எந்தவிதமான மிருகங்களைப் பற்றியும் குறிப்பிடவில்லையே' என்று உங்களில் சிலர் நினைப்பது தெரிகிறது. ஆனால் உலகில் அத்தகைய பயங்கரமான மிருகங்கள் நடமாட முதலில் உறுதியான நிலப் பரப்பு வேண்டாமா? உலகம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகே மெள்ள மெள்ள நிலப் பிரதேசம் தோன்றியது. நிலம் தோன்றிய பிறகுதானே நிலத்தில் வாழ மிருகங்கள் தோன்ற வேண்டும். நிலக்கரி யுகத்துக்குப் பிறகே நிலத்தில் வாழும் மிருகங்கள் உலகில் தோன்றலாயின. நிலக்கரி யுகத்தின் ஆரம்ப காலத்தில் பிராணிகள் உலகில் மிக முக்கியமான மாற்றம் தோன்றலாயிற்று. நீரிலிருந்து விடுபட்டு நிலத்திலேயே வாழ்வதற்குத் தகுதியாக ஜீவராசிகள் தங்களை மாற்றிக் கொண்ட இந்தக் காலம், உலகத்தின் கதையில் மிக முக்கியமான கட்டமாகும். நிலத்தில் வாழ்வதற்குத் தோன்றிய முதல் ஜீவராசிகள் தட்டாரப் பூச்சி, சிலந்தி, இரியாப்ஸ் (**Eryops**) எனப்படும் ஒரு வகைப் பிராணி ஆகியவைதான். ஆனால் நிலத்தில் வாழ்ந்த முதல் ஜீவன் தேள் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். டிரைலோபைட்டுகள் வாழ்ந்த காலத்தில் கடலில் தேளைப் போன்ற சில ஜீவன்களும் வாழ்ந்தன. முடிவாக நிலத்திலும் தேள்களின் நடமாட்டம் தோன்றியது. தேள்களைத் தொடர்ந்து சிலந்திகளும் அதன் பிறகு பல பூச்சிகளும் தோன்றலாயின. நிலக்கரி யுகத்தின் ஆரம்ப காலத்தில் தேள், சிலந்தி, பல்வேறு பூச்சிகள் ஆகியவை தோன்றி வாழலாயின. மிக நீண்ட இடைவெளியைக் கொண்ட நிலக்கரி யுகத்தில் இந்த ஜீவராசிகளும் பல்கிப் பெருகின.



# குழந்தைகள்

## பற்றிய பழமொழிகள்



1. குழந்தை மனிதனின் தந்தை.
—வேர்ட்ஸ் வொர்த்

2. ஒரு கிழவனைக் காப்பாற்றினால் ஒரு தனிப்பட்ட உயிரைக் காப்பாற்றினாய். ஒரு குழந்தையைக் காப்பாற்றினால் ஒரு பரம்பரையையே காப்பாற்றியவனாகிறாய்.
—ஜுப்லி ஸ்மித்

3. குழந்தைகள் கடவுளின் தூதர்கள்— அவர்கள் நாள்தோறும் அன்பு, உறுதி, அமைதி ஆகியவற்றைப் போதிப்பர்.
—லவல்

4. குழந்தையின் எதிர்காலம் முற்றிலும் தாயின் செயலில் அடங்கியிருக்கிறது.
—நெப்போலியன்

5. குழந்தைகள் தவறுகள் செய்ய அனுமதிக்கலாம்; அந்தத் தவறுகளிலிருந்து அவர்கள் படிப்பினை பெறுவதாக இருந்தால்.
—எச். யு. பீச்சர்

6. செய்து காட்டுபவர்களே குழந்தைகளுக்குத் தேவை. குறை காண்பவர்கள் தேவையில்லை.
—ஜோபார்ட்

தொகுப்பு ச. கணேசன்

7. மாமேதைகளும் தோற்றுப்போகுமிடம் குழந்தைகளின் உள்ளம்தான்! அவர்களின் அழுகைக்கும் சிரிப்புக்கும் காரணம் கண்டுவிட்டதாக சரித்திரமே கிடையாது!
—எமர்சன்

8. எந்த ஒரு மனிதனையும் இதயமில்லாதவன் என்று அழைக்காதீர்கள். ஏனெனில் அவனையும் 'அப்பா' என்று அன்போடு அழைத்து அணைக்க ஒரு குழந்தை இருக்கலாம்!
—மேரீ சால்கின்

9. குழந்தையின் கும்மாளம் இல்லாவிட்டால் இந்த உலகம் சுடுகாடாகி விடும். கிழவர்களின் பிடிவாதம் இல்லாவிட்டாலோ இந்த உலகம் மனிதத் தன்மையையே இழந்து விடும்! —கோல்ரீட்ஜ்

10. குழந்தைகளுக்குக் கவலையே இல்லை என்கிறார்களே, குழந்தைகள் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர்களென்ன மனிதர்களைப் போல நிமிடத்துக்கு ஒரு குற்றமா செய்கிறார்கள்? —ஜார்ஜ் எலியட்

11. சாட்டையடிபட்ட மாடு மந்தமாவது போல, குழந்தைகளின்பேரில் வசவு பாடப் பாட அவர்கள் கவைக்குதவாதவர்களாகி விடுகிறார்கள்.
— லாங்ஃபெலோ

12. குழந்தாய், நீ என் வம்சத்தை வாழ்விக்க மட்டும் பிறக்கவில்லை. எங்கள் இதயத்தைப் பண்படுத்த, அதில் ஈரத்தை உண்டாக்கப் பிறந்திருக்கிறாய்!
ஹோரஸ்

13. ஒவ்வொரு பருவத்துக்கும் ஏற்றாற்போல அன்பு மாறுகிறது. அன்பைச் செலுத்துவதற்கு பருவத்துக்கு ஏற்ற முறையும் இருக்கிறது. எந்த வேலியும் இல்லாமல் அன்பைச் செலுத்தக்கூடிய பருவம் குழந்தைப் பருவமே! —பட்லர்

14. எங்கு குழந்தைகள் இருக்கின்றனவோ, அங்கு பொற்காலம் கண்டிப்பாய் இருக்கும். ஏனெனில் அங்கு கலையுணர்ச்சி யெல்லாம் முழுமையாக இருக்கும்.
—நோவலிஸ்

15. குழந்தைகளின் எதிர் காலத்தை அதன் செயல்களில் இருந்து மட்டும் கண்டுபிடித்துவிட முடியாது. அதை வளர்க்கும் தாயைப் பற்றி அறிந்த பிறகுதான் கூற முடியும்! —ஜோபார்ட்

16. புத்திசாலியான ஒரு குழந்தை மகிழ்ச்சிகரமான ஒரு தந்தையைத் தோற்றுவிக்கிறான்!
—டிஸ்ரேலி

தொகுப்பு: 'பத்மா' கஜேந்திரன்




1732. வின்ஸ்டன் சர்ச்சில் பிறந்த ஆண்டு எது தெரியுமா?

1733. வ்ளாடிமிர் இலிடிச் உலயானேவ் என்ற இந்தப் பெயருக்குப் பின்னல் ஒரு புகழ்பெற்ற மனிதர் ஒளிந்து கொண்டிருக்கிருர் அது யார்?

1734. ஓர் ஆங்கிலேயர் 'டென்னிஸ் பிரெஞ்சுக்காரர்களுக்கான விளையாட்டு' என்று கூறினர். அந்தப் புகழ்பெற்ற ஆங்கிலேயர் யார் தெரியுமா?

1735. சென்ற இதழ் கோகுலத்தில் லியோ டால்ஸ்டாயின் பிறந்த வருடம் தவருக அச்சாகியுள்ளது. சரியான ஆண்டு எது ?

1736. மரங்கொத்தி ஒரு மரத்தின் கிளையில் அசையாமல் பல மணி நேரங்கள் அமர்ந்திருக்குமானல் அந்தக் கிளை பட்டுப் போய்விடும் என்ற நம்பிக்கை எந்த நாட்டிலே தெரியுமா?

1737. தேரைகளின் தலையில் சில வேளைகளில் சிறிய மந்திரக் கல் தோன்றுவதுண்டு. இத்தகைய கல்லை வைத்திருப்பவர்களுக்கு எந்தவிதமான அனுகூலங்கள் ஏற்படும் என்று மேல்நாட்டினர் நம்புகிருர்கள்?

1738. ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஹாக்கி முதன் முதலில் இடம் பெற்றது எந்த ஆண்டில் தெரியுமா? அந்த வருஷம் வெற்றி பெற்ற நாடு எது?

1739. வில்லியம் மேக்பீஸ் தாக்கரே என்ற நாவலாசிரியர் எங்கே எப்போது பிறந்தார் தெரியுமா?

1740. தாக்கரேயின் புகழ் பெற்ற நாவல் எது?

1741. பைபிளில் வரும் மோசஸ் என்பவர் இறந்த போது அவருடைய வயது என்ன?

1742. ஆஸ்திரியா நாட்டில் டைரோலியர் என்று ஒரு இனத்தவர். இவர்கள் ஆடும் நடனத்தை ஸ்குபுளாட்டர் (*Schuhplatter*) என்று பெயர். இந்த நடனமாடுபவார்கள் என்ன செய்வார்கள் தெரியுமா?

1743. க்ராகன் (*Kraken*) என்பது ஓர் இதிகாசப் பிராணி. இது எங்கு வசிப்பதாகச் சொல்லப்படுகிறது தெரியுமா?

1744. ஐநூறு வருடங்கள்வாழ்ந்த பிறகு தானகவே எரிந்து சாம்பலாகி அந்தச் சாம்பலிலிருந்து மறுபடி—தோன்றி மற்றுமோர் ஐநூறு ஆண்டு—கள் வாழ்வதாக ஓர் இதிகாச காலப் பறவையை வர்ணிக்கிருர்கள் மேலை நாட்டில். இப் பறவையின் பெயர் என்ன?

1745. க்ரைஃபான் (*Gryphon*) என்பது எப்படி இருக்கும்?

1746. கிரேக்கர்கள் காலத்திலிருந்த ஒலிம்பிக் விளையாட்டுக்களை மறுபடி 1896-ல் ஆரம்பித்து வைத்தவர் யார்?

1747. நவீன ஒலிம்பிக்கின் தந்தை என்று புகழப்பட்டவரை 1928-ல்—எப்படிக் கௌரவித்தார்கள்?

1748. எங்கு எப்போது முதல் முதலாக ஒலிம்பிக் ஜோதியை ஒரு பெண் ஏந்தி வந்து ஏற்றினள் தெரியுமா?

1749. ஒலிம்பியாடு — என்ருல்என்ன பொருள்?

1750. போலார்டு (*Pollard*) என்ற பெயர் யாருக்குக் கொடுப்பார்கள்?




விடைகள்: 1732. 1874ல் 1733. லெனின் அவருடைய முழுப் பெயர்தான் இது. 1734. ஷேக்ஸ்பியர். 1735. 1828. 1736. ஜெர்மனியில். 1737. நோய் நொடி அணுகாது. அதிர்ஷ்டம் வரும். 1738. 1908ம் ஆண்டில். வெற்றி பிரிட்டனுக்கு. 1739. இந்தியாவில் கல்கத்தா நகரில் 1811ம் ஆண்டில். 1740 வானிட்டி ஃபேர். 1741. நூற்றி இருபது வயது. 1742. இவ்வகை நடனமாடும் ஆண்கள் தங்கள் தொடை, முழங்கால், உள்ளங்கால் இவைகளைத் தட்டிக்கொண்டு ஆடுவார்கள். 1743. கடலுக்கு அடியில். 1744. போனிக்ஸ் என்ற பறவை (Phoenix). 1745. சிங்க உடலும் கழுகின் தலையும் இறக்கையுமுடைய இதிகாச காலத்து மிருகம். 1746. பாரன் பீரி டிகோபர்ட்டின் (Baron Pierre de Coubertin) என்பவர். 1747. சமாதானத்துக்கான நோபல் பரிசு கொடுத்து. 1748. மெக்ஸிகோ நாட்டில் 1968ம் ஆண்டு. 1749. கிரேக்க மொழியில் நான்கு ஆண்டுகள் என்பதைக் குறிக்கும் சொல். 1750. தலை முடியை ஒட்ட வெட்டிக் கொள்ளுபவர்களுக்கு அளிக்கும் பெயர் இது. கொம்பு ஒடிந்த மான் முதலிய மிருகங்களையும் தழை கழித்த மரங்களையும் இது குறிக்கும்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்




Agfacolor
இயற்கையான
வண்ணங்கள்
பொருந்திய பிலிம்.
CN 8
NEGA
CT 18
Agfacolor
ஆக்பா-கேவார்ட். இந்தியா லிமிடெட்